# இந்திய முகாமில் 15 யாழ்ப்பாணத்தவர்; கச்சதீவு பெருநாளில் கைதானவர்கள்


Riegtered as a News paper in Ceylon விலைசதம் 15

★ ★

ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 11
இதழ்: 88
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 28 ஸபர் 22 சனிக்கிழமை [10-5-69]





பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்.
யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம், சனி

கச்சதீவுப் பெருநாளின் போது இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இந்திய அகதிகள் முகாமில் வைக்கப்பட்டிருக்கும்மூன்றுபெண்கள் உட்பட 15 பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களெனத் தகவல் கிடைத்துள்ளது.

இந்திய பாதுகாப்பு இலாகா அதிகாரிகளிடமிருந்து கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் இது சம்பந்தமான விசாரணையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ் மேற்கொண்டுள்ளார்.

விலாசம் எதுவுமின்றி கைது செய்யப்பட்ட 15 பேருடைய பெயர்கள் மட்டும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் பெண்களாவர்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவினுல் நடாத்தப்பட்ட விசாரணையின் பின்னர் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்.

பகுதி பகுதியாக சகல இடங்களிலும் இதுபற்றிய விசாரணை கிராமசேவையாளர்கள் மூலம் நடாத்தப்பட்டு வருகின்றது.

(கா. நி.)

# வடக்கில் சிங்கள ஆசிரியர் நியமனத்தை எதிர்பார்க்கலாம்

## 'வடக்கே வருமுன் எமது கஷ்டங்களை நீக்குங்கள்'

### அமைச்சர் சி. பி. டிக்கு எம். பி. கடிதம்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சிப் பகுதியில் நிலவும் கடும் வரட்சி காரணத்தினுல் குடிநீர் இல்லாமல் அவதியுறும் மக்களுக்கு குடிநீர் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவை அவசர கடிதமொன்றின்மூலம் கேட்டுள்ளார்.

கிளிநொச்சித் தொகுதியில் இராமநாதபுரம் மக்களே குடிநீர் இல்லாமல் கூடுதலாகக் கஷ்டம் அடைவதாகவும் குடிநீர் வழங்க இணைப்பு முயற்சிகளை உடனடியாக மேற்கொள்வேண்டியது அத்தியாவசியம் என்றும் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. கா. பொ. இரத்தினம் அமைச்சர் சி. பி. டி. சில்வாவுக்கு எழுதியுள்ள மற்ருெரு கடிதத்தில் அடுத்த மாதம் வடபகுதி விஜயத்தை மேற்கொள்ளுமுன் கிளிநொச்சித் தொகுதியில் நிலவும் உப உணவு உற்பத்தி நிலத்தட்டுப்பாடு, வீதி திருத்தம், ஓட்டுத் தட்டுப்பாடு, பாடசாலைகள் திருத்தம், காணி அபிவிருத்தி இலாகா சீர்கேடு போன்ற பல்வேறு பிரச்னைகளையும் நிவர்த்தி செய்து தருமாறும் கேட்டுள்ளார்.

(கா. நி.)

## தமிழரசு தலைவர் சொல்கிருர்

— நமது காரியாலய நிருபர் —

யாழ்ப்பாணம், சனி

**"வடக்குக்கு சிங்கள ஆசிரியர்களை அரசாங்கம் அனுப்பிவைத்தால் அதனைநாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். அவர்கள் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடாத்துவோம். அதே வேளையில் யாழ்ப்பாணத்திலுள்ள தனிப்பட்ட பௌத்த பாடசாலைகள் மூன்றையும் அரசாங்கம் பொறுப்பேற்று அதனைத் திறக்க அமைச்சர்கள் இங்கு வந்தாலும் அதனைப் பகிஷ்கரிப்போம்."**

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் மேற்கண்டவாறு நமது நிருபரிடம் நேற்றுத் தெரிவித்தார். கரவெட்டி ஸ்ரீ காந்த வித்தியாலய, அச்சுவேலி விபாசி வித்தியாலய, அல்வாய் ஆனந்த செமகே வித்தியாலயம் ஆகிய மூன்றையும் அரசாங்கம் அடுத்த மாதம் முதல் பொறுப்பேற்கவிருப்பது பற்றிக் கேட்டபோதே திரு. இராசமாணிக்கம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. இராசமாணிக்கம் மேலும் தெரிவித்ததாவது:

இவ்விஷயம் பற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழரசுக் க[illegible]பின் பொதுச்சபைக் கூ[illegible]த்தில் நீண்டநேரம் ஆராயப்பட்டது வடக்குக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டதல் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செ[illegible]வதென்றும் குறிப்பிட்ட பௌத்த பாடசாலைகளைத் [illegible]

தமிழ்ப் பகுதிகளுக்கு வரும் சகல அமைச்சர்களையும் வரவேற்கச் செல்லாமல், அவர்கள் விஜயத்தை பகிஷ்கரிப்பதாக தமிழரசுக் கட்சி முடிவு செய்துள்ளதாக வேறு சில பத்திரிகைகளில் வெளிவந்த [illegible]ய்தி தவறுனதென்று குறிப்[illegible]ட திரு. இராசமாணிக்கம் உத்தியோகபூர்வமாக அமைச்சர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு விஜயம் செய்தால் அதற்கு அழைப்புக் இ[illegible]த்தால் தமிழரசு எம். [illegible]கள் [illegible]

## 'பாடசாலைக் கல்வியுடன் வீட்டுக் கல்வியும் வேண்டும்'

### மாவட்ட நீதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், சனி

"ஒவ்வொரு மாணவனதும் கல்வியில் பெற்ருேர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பாடசாலைக் கல்வியால் மட்டும் எந்த ஒரு மாணவனதும் அறிவு முற்ருக வளர்ந்துவிடாது. வீட்டுககல்வியும் கூட மிக மிக அவசியமாகும். இதில் பெற்ருேர்கள்தான் அக்கறை காட்டவேண்டும்."

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனுப் ஐ. எம். இஸ்மாயில் யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற முஸ்லிம் சிறுவர்களின் 5-வது ஆண்டு விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டுபேசுகையில் இவ்வாறு கூறினுர்.

மாநகரசபை உறுப்பினர் ஜனுப் எம். ஜி. பஷீர் தலைமையில் விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட நீதிபதி ஜனுப் இஸ்மாயில் மேலும் பேசுகையில் தரமான முறையில் கல்வி கற்பதால் மாணவனின் அறிவு வளர்ச்சியடைவதோடு சமுதாயமும் வளர்ச்சியடையுமென்றும், முஸ்லிம் சமூகத்தை வளர்ச்சியடைச் செய்ய ஒவ்வொரு மாணவனையும் சகல துறைகளிலும் பெற்ருேர் ஈடுபடச் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார்.

ஜனுப் பஷிர் பேசுகையில் கல்வியைப்போல விளையாட்டும் ஒவ்வொரு மாணவனுக்கு அத்தியாவசியமானதாகையால் மாணவர்களது பொருளாதார ஆக்கவேலைகளுக்கு பெற்ருேர் தங்களால் இயன்ற உதவியளிக்க வேண்டுமென்ருர்.

அல்ஹாஜ் என். எம். மீரான் மொகிதீன் ஆலிம், ஜனுப் எம்.எஸ். மொகமட், நூர்முகம்மது ஆகியோரும் பேசினுர்கள். சைக்கிலோட்டம், மரதன் ஓட்டம், விநோதஉடை, ஆகியன உட்பட சகல போட்டிகளிலும் வெற்றிபெற்றவர்களுக்கு ஜனுப் இஸ்மாயில் பரிசில்கள் வழங்கினுர்.

திரு. ஏ. ஜி. பஜீர் நன்றி தெரிவித்துப்பேசினுர்.

(கா. நி.)

## ஒரு ஆசிரியருடன் நடக்கும் பாடசாலை

யாழ்ப்பாணம். சனி

நெடுங்கேணி குளவி சுட்டான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 68மாணவர்களுக்குப் பதிலாக ஒரு ஆசிரியரே கடமையாற்றி வருகிருராம். 6-ம் வகுப்பு வரையுள்ள இப் பாடசாலையில் அரசினரால் நடத்தப்படும் 5-ம். 6-ம் வகுப்பு பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் இதனுல் மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

பாடசாலைக் கட்டடங்களும் க்வனிப்பாரற்ற நிலையில் இருக்கின்றதாம். கூரையும் ஓடுகள் இல்லாமல் இருக்கிறது. ஆசிரியர் பற்ருக்குறை பற்றியும் கட்டட நிலை பற்றியும் பலதடவை சம்பந்தப்பட்டவர்களிடம் புகார் செய்தும் இதுவரை எதுவித பயனுமில்லையாம்.

(ந. நி)

......

## ஊர்வலத்தில் பெண்களும் கலந்து கொள்வர்

யாழ்ப்பாணம், சனி

சுன்னுகத்திலிருந்து இம் மாதம் 15-ம் தேதி சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், நூற்றுக்கணக்கான பெண்களும் கலந்து கொள்வார்கள் என்றும் திரு. கே. டானியல் தெரிவித்தார்.

ஊர்வலம் நடாத்துவதற்கு பொலிஸாரிடம் அனுமதி கோரியிருப்பதாகவும்அனுமதி கிடைத்தாலென்ன கிடைக்க விட்டாலென்ன திட்டமிட்டபடி ஊர்வலம் நடக்குமென்றும் [illegible]

## "அரசாங்க மொழிப் பிரச்னையில் ஓய்வுபெற்று கூட்டுத்தாபனங்களில் எத்தனை பேர் தொழிலாற்றினர்?"

கோட்டை, வெள்ளி

அரசாங்க மொழியில் கடமையாற்ற முடியாத காரணத்தால் இளைப்பாறும் சலுகை பெற்ற அரசாங்க ஊழியரில் எத்தனைபேர் 4.1-68 லிருந்து அரசாங்க கூட்டுத் தாபனங்களில் கூட்டுத் தாபனங்களின் பெயர்கள், அவற்றில் இவ்வாறு தொழிலாற்றுவோரின் பெயர்களும் அவர்கள் புரியும் தொழில்களும் யாவை?

இவ்வூழியர்களில் எத்தனை பேர் 1-7-68லிருந்து அரச [illegible]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யில் இராமநாதபுரம் மக்களே குடிநீர் இல்லாமல் கூடுதலாகக் கஷ்டம் அடைவதாகவும் குடிநீர் வழங்க இணைப்பு முயற்சிகளை உடனடியாக மேற்கொள்வேண் [illegible] போன்ற பல்வேறு பிரச்னைகளையும் நிவர்த்தி செய்து தருமாறும் கேட்டுள்ளார்.

(கா. நி.)

செமகே வித்தியாலயம் ஆகிய மூன்றையும் அரசாங்கம் அடுத்த மாதம் முதல் பொறுப்பேற்கவிருப்பது பற்றிக் கேட்டபோதே

ஆரம்பிக்கப்பட்டது வடக்குக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டால் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதென்றும் குறிப்பிட்ட [illegible]த்த பாடசாலைகளைத் திறந்துவைக்க அமைச்சர்கள் வடக்குக்கு வந்தால் அதனை பகிஷ்கரிப்பதென்றும்முடிவு செய்யப்பட்டது

திரு. இராசமாணிக்கம் உத்தியோக பூர்வமாக அமைச்சர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு விஜயம் செய்தால் அதற்கு அழைப்பு [illegible]த்தால் தமிழரசு எம். [illegible]கள் அதனைப் பகிஷ்கரிக்காமல் அவ்விஜயத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்தர். (கா. நி,)

மையாற்ற முடியாத காரணத்தால் இளைப்பாறும் சலுகை பெற்ற அரசாங்க ஊழியரில் எத்தனைபேர் 4.1-68 லிருந்து அரசாங்க கூட்டுத் தாபனங்களில் தொழிலாற்றினுர்கள்.

செனட்டர் திரு எச். வி. டாக்ஸன் செனட்சபை முதல்வரிடம் இன்று மேற்கண்ட கேள்வியைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

கேள்வி விபரம் வருமாறு:

வாறு தொழிலாற்றுவோரின் பெயர்களும் அவர்கள் புரியும் தொழில்களும் யாவை?

இவ்வூழியர்களில் எத்தனை பேர் 1-7-68லிருந்து அரச மொழித் தகமைப் பரீட்சைக்கு தோற்றினுர்கள்?

இப்பரீட்சைக்கு சித்திஎய்தியஊழியர்களினதும் சித்தி எய்தாத ஊழியர்களினதும் பெயர்களும் அவர்கள் தொழிலாற்றும் கூட்டுத்தாபனங்களும் யாவை?

தற்கு பொலிஸாரிடம் அனுமதி கோரியிருப்பதாகவும்அனுமதி கிடைத்தாலென்ன கிடைக்க விட்டாலென்ன திட்டமிட்டபடி ஊர்வலம் நடக்குமென்றும் இவர் மேலும் தெரிவித்தார்.

மே. முதல் தேதி யாழ்ப்பாணத்தில், பொலிஸார் நடத்திய தாக்குதலை கண்டித்து, இந்த ஊர்வலம் நடைபெறுமென்றும், அன்று மாலை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் பொதுக் கூட்டமும் நடைபெறுமென்றும், கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, திரு. என். சண்முகதாசன் ஆகியோர் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்.

......

## "வயலில் குழந்தையின் சடலம் கிடப்பதைக் கண்டேன்"

### சிசுக்கொலை வழக்கில் சாட்சியம்

அல்லைப்பிட்டி, வெ.

"திருமணம் நடைபெற்ற வீட்டிற்கு அருகாமையிலுள்ள வயலில் நாயினுல் கவ்வப்பட்வ சிதைந்த குழந்தையொன்றின் சடலம் கிடபபதைக் கண்டேன். அச்சடலத்தை பாதுகாப்பதற்காக இருவரைக் காவல் வைத்துவிட்டு ஊர்காவற்றுறைப் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தேன்."

மேற்கண்டவாறு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் ஜனுப் முகம்மது ஜமீல் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட சிசுக் கொலை வழக்கில் வேலணை கிழக்குப் பிரிவைச் சேர்ந்த கிராமசேவையாளர் கந்தையா வடிவேலு சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

இவ்வழக்கில் வேலணை கிழக்கைச் சேர்ந்த சண்முகநாதன் மனைவி அம்பிகாபதி என்னும் இளம்பெண் சிசுவைக் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். கிராமசேவையாளர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் 'சம்பவ தினம் நான் எனது கந்தோரில் இருந்தேன். அன்று மாலை சுமார் ஐந்துமணியளவில் பாலசுப்பிரமணியம் என்பவர் ஓர் சிசு வயலில் இறந்துகிடப்பதாக தகவல் தந்தார். நான் அங்குசென்று பார்த்தபொழுது ஓர் குழந்தையின் சடலம் திருமணம் நடந்த வீட்டிலிருந்து சுமார் 15 யாருக்கப்பால் முகம் குப்புறக் கிடப்பதைக் கண்டேன். இத் தகவலைத் தந்திமூலம் ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு தெரிவித்தேன்" என்ருர்.

மாஜிஸ்திரேட் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தான் சண்முகநாதனின் வீட்டிற்குச் சென்று எதிரி படுத்திருந்த இடத்தைப் பரிசோதனை செய்ததாகவும் அங்கே எதிரி படுத்திருந்த பாயிலும் அருகிலுள்ள தட்டியிலும் வயலில் காணப்பட்ட துணியிலும் இரத்தக்கறைகள் படிந்திருப்பதைக் கண்டதாகவும் கிராமசேவகர் கூறினுர். மேல்விசாரணை இம்மாதம் 12ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 6 பிள்ளைகளின் தாய் தற்கொலை உதவி அளித்தவர் ஆஸ்பத்திரியில்

அல்லைப்பிட்டி, வெள்ளி

வேலணை கிழக்கைச் சேர்ந்தசேனுதிராசார் செல்லம் என்னும் 35 வயதுப் பெண் வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக நச்சுத்திராவகம் அருந்தி தனது உயிரை மாய்த்துக் கொண்டார். மரணமான செல்லம்மா நச்சுத்திராவகம் அருந்துவதைப் பார்த்த கோபாலபிள்ளை மகேஸ்வரி என்பவர் அவரைக்காப்பாற்ற முயற்சிக்கும்போது அவரும் மயக்கமுற்ற நிலையில் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

மரணமானவர் ஆறு பிள்ளைகளின்தாய் என தெரிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக புங்குடுதீவு மரண விசாரணை அதிகாரி திரு. ப. கதிரவேலு விசாரணை நடத்தினுர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## புகார்செய்தும் பயனில்லையாம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண சிங்கள மகாவித்தியாலயத்தில் தினமும் நாலு வகுப்புகள் ஆசிரியர்களின்றி நடந்துவருவதாகவும், இதுபற்றி புகார்செய்தும் கல்விஅமைச்சு எவ்விதநடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும், பெற்ருேர் ஆசிரியர்சங்க செயலாளர் தெரிவித்தார்.

பயிற்றப்பட்ட இரு ஆசிரியைகள் இடமாற்றம் செய்யப் பட்டதாகவும், அந்தஇடங்கள்நிரப்பப்படாமலிருப்பதாகவும், வீட்டுப்பணி ஆசிரியை பல மாதங்களாக நியமிக்கப்படாமலிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 245-வது சீட்டு முடிவுகள் வருமாறு:-

**1-வது பரிசு**

06 U 0484 ரூ. 79,480

**2-வது பரிசு**

08 B 0111 ரூ. 31,792

**3வது பரிசு**

32 P 0366 ரூ. 7,948

தலா 397 ரூபா 40 சதம் பெறும் 100 பரிசுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 18 V 0032 | 29 D 0363 |
| 20 J 0088 | 26 D 0038 |
| 15 U 0871 | 05 R 0045 |
| 01 Q 0495 | 27 Q 0241 |
| 25 D 0120 | 36 W 0129 |
| 13 B 0866 | 27 T 1000 |
| 14 A 0094 | 29 F 0744 |
| 05 X 0473 | 11 X 0136 |
| 18 L 0147 | 33 U 0454 |
| 08 H 0336 | 40 X 0967 |
| 31 J 0759 | 10 J 0235 |
| 28 F 0609 | 32 E 0011 |
| 37 H 0 01 | 01 C 0002 |
| 07 B 0170 | 07 W 0950 |
| 10 J 0183 | 10 H 0619 |
| 34 G 0308 | 33 L 0569 |
| 01 E 0058 | 21 D 0678 |
| 23 B 0997 | 30 J 0180 |
| 07 M 0841 | 17 R 0208 |
| 14 O 0814 | 40 P 0372 |
| 23 Y 0690 | 11 o 0037 |
| 32 L 0742 | 23 N 0156 |
| 16 W 0942 | 17 o 0244 |
| 05 H 0994 | 37 N 0612 |
| 10 V 0241 | 23 N 0217 |
| 39 R 0964 | 03 H 0133 |
| 20 P 0304 | 10 V 0875 |
| 26 M 0558 | 15 V 0583 |
| 14 K 0962 | 13 T 0665 |
| 19 Q 0721 | 39 G 0624 |
| 37 W 0435 | 24 D 0012 |
| 27 P 0377 | 09 H 0431 |
| 31 K 0601 | 04 [illegible] 0110 |
| 16 Q 0103 | 36 M 0939 |
| 27 N 0209 | 06 J 0485 |
| 15 S 0955 | 26 G 0492 |
| 26 M 0668 | 18 V 0400 |
| 04 J 0694 | 14 R 0735 |
| 34 H 0894 | 91 J 0348 |
| 32 A 0338 | 09 O 0788 |
| 03 D 0100 | 29 N 0144 |
| 36 X 0513 | 34 Q 0617 |
| 13 V 0286 | 53 N 0272 |
| 35 E 0205 | 37 T 0227 |
| 26 J 0652 | 37 Z 0709 |
| 16 P 0588 | 12 D 0710 |
| 16 F 0125 | 14 Z 0618 |
| 25 Z 0498 | 29 X 0604 |
| 23 S 0552 | 09 N 0613 |
| 03 J 0001 | 31 N 0652 |

## "யாழ். மார்க்கட் கட்டட வேலை இரண்டு வாரத்தில் ஆரம்பமாகு

### மேயர் நாகராஜா அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி

"யாழ்ப்பாணம் நவீன மார்க்கட்டுக்கான கட்டட ஆரம்ப வேலைகள் இன்னும் இரண்டு வார காலத்துள் ஆரம்பமாகும்"

யாழ். நகர மேயர் திரு. எஸ். நாகராஜா இந்தத் தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

மார்க்கட் டென்டரில் மோசடி நடைபெற்றதாகவும், இதனுல் கட்டட வேலை தாமதமாகலாம் எனவும் அடிபடும் செய்திக்குப் பதிலளிக்குமுகமாக மேயர் திரு. நாகராஜா இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பிட்ட சில அங்கத்தவர்கள் மார்க்கட் கட்டுவதை தடுப்பதற்காகசில சூழ்ச்சிகளை காலாகாலத்தில் செய்து கொண்டிருக்கின்ருர்கள் இது போன்ற எந்தச் சூழ்ச்சியாலும் கட்டட வேலை தடைப்படமாட்டாது.

வழங்கப்பட்ட 'மைற்' ஸ்தாபனத்தாரால் கட்டட வேலைகள் இன்னும் இரண்டு வாரத்தில் ஆரம்பமாகுமென்றும், இது சம்பந்தமாக அடிபடும் ஆதாரமற்ற வதந்திகளை வரியிறுப்பாளர்கள் நம்பக்கூடாதென்றும் திரு நாகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். (கா.நி.)

## 'தமிழ்மாணவர்களைப்பார்த்து பொருமைப் படுகின்றனர்'

### கண்காட்சிவிழாவில் தீவுப்பகுதி எம். பி.

அல்லைப்பிட்டி, வெள்ளி

'இன்று தென்னிலங்கையைச் சேர்ந்த மாணவர்களை விட எமது மாணவர்கள் கல்வித்துறையில் மட்டுமல்ல விவசாயம், கைத்தொழில், விஞ்ஞானம் போன்ற ஏனைய துறைகளிலும் முன்னேற்றம் உடையவர்களாக இருக்கின்ருர்கள். இவற்றைப் பார்த்த தென்னிலங்கை அரசியல் வாதிகள் தமிழ்ப் பிள்ளைகளுக்கு கல்வித்துறையில் அதிக வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதாக தெற்கில் பிரசாரம் செய்கிருர்கள். ஆனுல் தென்னிலங்கை மாணவர்களிலும் பார்க்க எமது மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் குறைவாகவே இருக்கின்றன.

மேற்கண்டவாறு வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலை, விஞ்ஞான, கைத்தொழில், பொருட் காட்சிகளைத் திறந்துவைத்துப் பேசும்போது த்வுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரெத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "தமிழ்மாணவர்கள் தங்களது முயற்சியினுல்தான் முன்னேறிவருகிருர்களேயொழிய அரசாங்கம் செய்துள்ள பிரத்தியேக சலுகைகளினுல் அல்ல என்றும் கிழக்கிலங்கை அரசியல்வாதிகள்பொருமை கொள்வதில் அர்த்தமில்லையென்றும் தீவுப்பகுதியிலே முதன்முறையாக இப்படிப் பட்ட பொருட்காட்சியை நடாத்துவது முன்னேற்றமான செயல் என்றும் கூறினுர்.

கல்லூரிஅதிபர் திரு. ஜே. ஏ. அரியரெத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினுர். வடமாநில கல்வி அதிகாரி திரு. தணிகாசலம் முன்னுள் அதிபர் திரு. ஏ. கே. கந்தையா ஆகியோர் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டனர். இப்பொருட்காட்சியில் கைத்தொழிற்பகுதி, விவசாயப்பகுதி, சுகாதாரப்பகுதி என்பன பங்குபெற்றன.

## பல்கலைக் கழக மாணவருக்கு குறை

கொழும்பு, வெள்ளி

பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்க பட்டுவரும் மாணவர்கள் உடல்நலக்குறைவு மிக்கவர்களாக இருப்பதாக வைத்திய அதிகாரி திரு.ஏச். பி.ஏ. விஜயதுங்க ஒருஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கண்பார்வைக்குறைவு, ஓரளவு செவிட்டுத்தன்மை பற்சூத்தை முதலியவற்றுடன் இந்த மாணவர்கள் இருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

**வடக்கு கிழக்கு மாகாணங்களில்**

## சட்டவிரோத குடியேற்றம் குறைந்து வருகிறது

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டவிரோத குடியேற்றக்காரரின் எண்ணிக்கை 67-68-ம் ஆண்டளவில் மிக குறைந்திருப்பதாகவும், கடந்த ஆண்டில் 10 பேரே இவ்வாறு கைது செய்யப் பட்டிருப்பதாகவும் திரு. டபிள்யூ. ரி. ஜயசிங்க தமது நிர்வாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணப்பகுதியில் பொலிஸ், கப்பற்படை போன்றவற்றின் ரோந்து நடவடிக்கைகளை அதிகமாக்கியதனுலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

......

## இரும்புக்கம்பியால் தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், சனி

இரும்புக்கம்பியால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த 31 வயதுடைய துரைசிங்கம் என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

அரியாலையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் பஸ் கண்டக்டர் ஒருவர் இவரைத் தாக்கியதாக பொலிஸ் புகாரில் தெரிவிக்க்ப்பட்டுள்ளது.

## புதிய தேர்

அல்லைப்பிட்டி. வெள்ளி

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கு ரூபா அறுபதியிரம் செலவில் புதிய தேர் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கானபூர்வாங்க வேலைகளை தேர்திருப்பணிச் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிரமதானம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை திருக்குடும்ப மகா வித்தியாலயத்தைச் சேர்ந்ததமாணவிகள் இளவாலை சென் தேவாலய திருத்த வேலையை சிரமதானமூலம் செய்தனர். ஆலய திருத்த வேலைகள் இங்கு நடைபெறுகின்றன.

......

## பரவுகிறது

பண்டத்தரிப்பு, வெள்ளி

இப்பகுதிகளில் சளிச்சுரம் பரவி வருகிறது. நுளம்புகளும் அதிகம் காணப்படுகின்றன. பாடசாலைகளில் மலேரியாத் தடுப்பு ஊசிகள் மாணவர்களுக்கு ஏற்றப்படுகின்றன.

## இரண்டரை நாளின்பின் நடைபெற்ற மரணவிசாரணை

யாழ்ப்பாணம், சனி

லொறிவிபத்தில் மரணமான வாலிபர் ஒருவரது மரணவிசாரணை மரணமான தினத்திலிருந்து 61 மணித்தியாலங்களின் பின்னரே நடைபெற்றது. அதுவரை சடலம் ஆஸ்பத்திரியிலுள்ள குளிரூட்டப்பட்ட சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

மரணமான பியதாசா என்ற வாலிபர் முல்லைத்தீவில் நடைபெற்ற லொறி விபத்தில் சிக்கி கடந்தசெவ்வாய்க்கிழமை இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. என் இராசநாயகம் மரணவிசாரணைநடத்தினுர். பிரேத பரிசோதனை செய்த பின்னர் சடலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப் பட்டது.

முல்லைத்தீவுப் பொலிசார் குறித்த நேரத்துக்கு வராததாலேயே 61 மணி நேரத்தின் பின்னர் மரணவிசாரணை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது (கா.நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

அரிசி மில்லில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர் தேவை. திறமைக்கேற்ற சம்பளம், ''போனர்ஸ்'' வழங்கப்படும். தொழிலாளர் சேமநிதியும் செலுத்தப்படும். மாப்பியன் மில், மானிப்பாய். 1106

நெசவு செய்வதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். கருணை நெசவு நிலையம், ''கண்ணகிரி'', இடந்தலை ஒழுங்கை, காங்கேசன்துறை. 974

மலைநாட்டிலுள்ள டாக்டருக்கு அனுபவமும் நல்லொழுக்கமும் உடைய மோட்டார்க் கார்ச்சாரதி தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1108 C o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1108

### விற்பனைக்கு

15 ''ஹோஸ்பவர்'' சக்தியுள்ள பார்ட்டுபிஸ்டன் சிலேஸ் பீற் றஸ்டன் ஒயில் என்ஜின் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. மாப்பியன் மில், சுதுமலை. 1107

சமண்டலை மரங்கள்: இரண்டு 85 வருட 5 அடி சுற்றளவு, 35 அடி உயரமுள்ளவை. இரண்டு 45 வருட, 4 அடி சுற்றளவு, 40 அடி உயரமுள்ளவை பரீட்சித்துப் பார்த்து எழுத்தில் விண்ணப்பிக்கவும். 9, சேர்ச்வீதி. சாவகச்சேரி. 1103

லான்ட்றேவர்:
நல்ல நிலையிலுள்ள லான்ட்றேவர் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சி. கணேஷ், இல. 17, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 1013

கைதடி அரசாங்க வயோதிபர் இல்லத்திற்கு முன்பாக, கைதடிச் சந்திக்குக் கிட்ட கண்டி ரோட்டில் ஆறு பரப்புக் காணி உடனே விற்பனைக்கு உண்டு. விபரங்கள்: அதிபர், செவிடர் குருடர் பாடசாலை, கைதடி. 998

## முகமாலைக் கிராமசபை கேள்விவிளம்பரம்

கீழ்க்காணும் ஒழுங்கை வேலைக்கு 1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 28-ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரையும் பத்தாயிரம் ரூபாவுக்குமேல் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் என்னல் ஏற்றுக்கொள்ளப்படும்.

1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ந் திகதி தொடக்கம் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை இக்கிராமசபைச்செயலகத்தில் ரூபா 50/- கேள்விப் பிணைப்பணமாகவும். ரூபா 10 - கேள்விப்பத்திரப் பணமாகவும் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/- திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. ஏனைய விபரங்களைக் கிராமசபைச் செயலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ஒழுங்கையின் பெயர்
அவரிக்காட்டு ஒழுங்கை.

ச. சின்னத்துரை ஜே. பி.,
தலைவர்,
கிராமசபை, முகமாலை.

கிராமசபைச் செயலகம்,
முகமாலை-பளை.
7-5-1969. 1566

### கல்வி

அனுபவமிக்க பெண்பட்டதாரிகளால் நடத்தப்படும் தனிமகளிர் கல்லூரி. காலை. மாலை வகுப்புகள் ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம். தாமதமின்றி விண்ணப்பிக்கவும். யுனைட்டெட் மகளிர் கல்லூரி, 107 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1109

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## சங்கானைப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

1969ம் ஆண்டு வைகாசி மாதம் 30ம் திகதி முற்பகல் 10-30 மணிவரைக்கும் மேற்படி பட்டினசபைத் தலைவரால் 6ம் வட்டாரத்திலுள்ள நாவிதர் வீதிக்குக் கல்லுப்பதித்து தார் ஊற்றுவதற்கு ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/ம், பத்திரப் பணம் ரூபா 5/ம் செலுத்தியதின் பேரில் 27-5-69 காலை 10-30 மணிவரை தலைவரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படல்வேண்டும்.

ஏனைய விபரங்கள் சங்கானைப் பட்டினசபை அலுவலகத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சி. வயிரமுத்து
பதில் தலைவர்,
பட்டினசபை,
சங்கானை.

பட்டினசபைக் காரியாலயம்
சங்கானை.
6-5-69. 1564

### அறிவித்தல்

1969-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி பி. ப. 3 மணி வரையும் தெல்லிப்பழைக் கிராமசபைத் தலைவரால் கீழ்க்காட்டப்படும் வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் ரூபா 100/- கட்டுப்பணமாகவும், ரூபா 10/- கிரயமாகவும் கட்டியதன் பேரில் 19-5-69-ம் திகதி மாலை 4 மணி வரையும் வழங்கப்படும் பத்திரத்தில் நிரப்பப்படவேண்டும். மேலதிக விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் விபரம்

(1) அன்னம்மா கோவிலடி ஒழுங்கை.
(2) கிட்டங்கி ஒழுங்கை.
(3) குளமன்கால் ஒழுங்கை.

ம. சிதம்பரநாதன்,
தலைவர்.

கிராமசபை அலுவலகம்,
தெல்லிப்பழை.
7-5-69. 1565

### நாட்டின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறிமாறி ஏமாற்றி வருகின்றன; சிந்திக்க எவருக்கும் உரிமையுண்டு. அரசி

## யாழ் - காலி கிரிக்கெட் மோதல்
# வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், சனி
யாழ். தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், காலி தெரிவு கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில், யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றகிரிக்கெட் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 216 ஓட்டங்களைப் பெற்றது இதில் குலநாதன் 76 ஓட்டங்களையும், காப்டன் சுரேந்திரா 61 ஓட்டங்களையும் பெற்றனர் காலி கோஷ்டியின் பந்து வீச்சு வீரர் பரமநாதன் 56 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினுர்.

காலிக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 154 ஓட்டங்களைப் பெற்றது இதில் கே. பெரேரா 43 ஓட்டங்களையும், டபிள்யு. பெருமாள் 27 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். கோஷ்டியின் பந்து வீச்சு வீரர்களான, ஜோசப், தில்லையம்பலம், செல்வானந்தராசா ஆகியோர் முறையே 4, 3, 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ். கோஷ் 2-வது இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 140 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் சுரேந்திரா ஆட்டம் இழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்ருர். சிறிசேன 3 விக்கெட்டுகளையும், விமலசிறி 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

காலிக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில் ஓட்டங்களை மிகவேகமாகப் பெற்றது. இக் கோஷ்டியின் ஆரம்ப துடுப்படி வீரர்களான பெருமாள், ரி. பெரேரா ஆகியோரின் துடுப்படி மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. பெருமாள் 51 ஓட்டங்களுடனும், பெரேரா 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். காலிக் கோஷ்டி 50 ஓட்டங்களை 20 நிமிடங்களிலும் 100 ஓட்டங்களை 65 நிமிடங்களிலும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இக் கோஷ்டி 8 விக்கெட் நஷ்டத்துக்கு 160 ஓட்டங்களைப் பெற்ற போது நேரமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஜோசப் 3 விக்கெட்டுகளையும், தில்லையம்பலம் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினுர்கள்

முதல் இன்னிங்ஸில் யாழ். தெரிவுக் கோஷ்டி, காலி தெரிவுக் கோஷ்டியை விட கூடுதலான ஓட்டங்களைப்

யாடுவதற்கு யாழ். கோஷ்டி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ். அரையிறுதிப் போட்டி, யாழ். தெரிவுக் கோஷ்டிக்கும், கண்டி தெரிவுக் கோஷ்டிக்குமிடையே வருகிற 11-ம், 12-ம் திகதிகளில் கண்டியில் நடைபெறும். (தே. நி)

## கூட்டணி வா மு. மாட்டு வண்டிப் போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி
மேதினத்தை முன்னிட்டு உடுப்பிட்டித் தொகுதி இடதுசாரிக் கூட்டணி ஆதரவு வாலிப முன்னணி கரவெட்டி வெல்லன் வெளியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை நடத்தியது முடிவுகள் வருமாறு,

ஏ. பிரிவு: சங்கரப்பிள்ளை, இளையதம்பி, திருச்செல்வம்

பி-பிரிவு: சின்னத்துரை குழந்தைவேலு, செல்லையா.

இவர்களுக்கு மாத்தறை எம். பி. திரு. பி. வை. துடாவை பரிசில்களைவழங்கினுர்.

## பக்தவத்சலம் திரும்பினுர்

சென்னை, மே 9
காங்கிரஸ் மாசபை மண்டபத்தில் தீபற்றியபோது பரிதாபாத்தில் கைமுறிவுக்குள்ளான தமிழ்நாடு முன்னுள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் சென்னைக்குத் திரும்பிவிட்டார்.

## இன்றைய பலன்

சௌமிய வருடம்
10-5-69
சனிக்கிழமை
சித்திரை 28-ந் திகதி

திதி- நவமி பகல் 3-26 மேல் தசமி.

நட்சத்திரம்- சதயம் இரவு 1-31மேல் பூரட்டாதி.

ராகுகாலம் 8-55— 10-25.

சுபநேரம்- 2-55 — 4-25.

இன்று பிறந்தவர்களுக்கு— மணம் முடிப்போர்க்கு மகிழ்ச்சிக்குரிய

## ருவின்ஸ் வெற்றி

நல்லூர், வெள்ளி
கந்தர் மடம் ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் ஆனைக்கோட்டை விளையாட்டுக் கழகத்திற்கு மிடையில் நடைபெற்ற சிநேகித பூர்வமான மென்பந்து போட்டியில், ருவின்ஸ் விளையாட்டுக் கழகம் 15 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப் போட்டி ருவின்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 10—5—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 படப்பாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன் 49 மீ.**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன் 61 மீ.**

மாலை 4-30 செய்திச்சுருக்கம், 4-35 மெல்லிசை, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 புல்லாங்குழலிசை, 7-35 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 கடிதங்கள், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## இன்று குருபூசை

பரந்தன், சனி
திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை இன்று பரந்தன் இந்துக்கலவன் பாடசாலையில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

குருபூசையில் திரு. வடிவேலுசுவாமியார், வட்டார கல்வி அதிகாரி திரு. என். துரைசாமி ஆகியோர் கலந்துகொண்டு பேசுவர்

## ஒருகுடம்தண்ணீர் 30 சதம்

அல்லைப்பிட்டி, வெள்ளி
புங்குடுதீவில் நிலவிவரும் கடும் வரட்சிகாரனமாககுடி தண்ணீர்ப்பஞ்சம் இங்கு மிகவும் மோசமடைந்துவருகிறது. இங்குள்ளபல கிணறு, குழங்கள் வற்றிவரண்டு போய்விட்டன. இப்பகுதி மக்கள் விலைகொடுத்துகுடத் தண்ணீர் பெறுகின்றனர். தூர இடங்களிலிருந்து குடி தண்ணீர் இப்பகுதிகளுக்கு வண்டிகள்மூலம் ஏற்றிவரபட்டு விற்பனைசெய்யப்படுகிறது. ஒருகுடம்தண்ணீர் இருபத்தைந்து சதத்திலிருந்து முப்பதுசதம்வரை விற்பனையாகிறது.

## நடவடிக்கை

சுழிபுரம், வெள்ளி
சுழிபுரம் கிராமசபையினருக்கு சேரவேண்டிய வரியைச் செலுத்தத் தவறிய கடைச் சொந்தக்காரர் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டு வரிப் பணம்அறவிடப்பட்டதுடன் குற்றப்பணமும் செலுத்தும்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

பிரமாண்டமான
# ஏல விற்பனை
மே 16-ந் திகதி வெள்ளிக்கிழமை
காலை 10-30 மணிக்கு
பிரமாண்டமான ஏல விற்பனை
யாழ்ப்பாணம்
சுண்டிக்குளியில்
17 கட்டிடக் காணிகள் 17



மாநகரசபைஎல்லைக்குள் கொழும்புத்துறை ரோட்டுக்கு சிறிது அப்பால் ஆனல் ஓரமாக
O சுண்டிக்குளி மகளிர்கல்லூரி O சென்ஜோன்ஸ்கல்லூரி O பஜார் O கச்சேரி O கோவில்கள் O தேவாலயங்கள் முதலியவற்றிற்கு மிக அண்மையில்,
மின்சார வசதியும்
தண்ணீர் விநியோக சேவையும் உண்டு. நல்ல உறுதி உறுதியும், படமும், இந்தக் கந்தோரின் புரக்டர்களும், நொத்தாரிசுகளுமான மெஸர்ஸ் கொடிகார & அபேயநாயக்கா அவர்களிடம் உண்டு.
டக்ளஸ் சி. குரேரா, ஏலதாரர்.
புரொப்பட்டி சேல்ஸ் லிமிட்டெட்
O ஏலதாரர்கள் O தரகர்கள் O கட்டிடக்காரர்கள்
279, யூனியன் பிளேஸ், :: :: கொழும்பு.
போன்: 25155 1562

## 'ஈழநாடு'
## செய்தி தலைப்புப் போட்டி — (3)

இப்போட்டிக்கு வந்த விடைகளில் பெரும்பாலானவற்றில் 'மந்திரவாதி', 'தந்திரம்' என்ற சொற்கள் வந்ததில் வியப்பொன்றுமில்லை. போட்டிக்குழு அவற்றில் எதையும் சிறந்ததென தெரிவுசெய்யவில்லை.

### பரிசுபெறும் விடை

கீழ்வரும் விடை மிகச் சிறந்ததென தீர்மானிக்கப்பட்டது

'பொற்புதையல் பூசை செய்ய கற்புதையல் ஆயிற்று'

இதை எழுதி ரூபா ஐந்து பரிசுபெறுபவர்: மு. பொன்னுத்துரை, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

### பாராட்டுக்குரியவை

பின்வருவனவும் சிறந்த பாராட்டுதல் பெற்றன. 'முல்லைத்தீவில் கல்லுப்புதையலா?', 'கல்லுப் புதையலுக்கு கொள்ளைப் பணச் செலவு', 'நம்ப நட நம்பி நடவாதே,' 'தனம் தோற்றது தந்திரம் வென்றது.

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
விஜயகுமாரி
நடித்த
ஜீவனம்சம்
வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வின்ஸர்** யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா

ஏ. வி. எம். ராஜன், ஜோதிலக்ஷ்மி

சோ, நாகேஷ்

நடித்த

ராம்குமார் பிக்சர்ஸ்

**கலாட்டா கல்யாணம்**




**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

**யாழ் வெலிங்டன் திரையில்**

தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு

போயா முன்தினம் போயா தினம்,

விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு



பத்மஸ்ரீ பானுமதி — குணசித்திர நடிகர் எஸ் வி. ரங்கராவ்

ஏ. வி. எம். ராஜன் - பண்டரிபாய்

முத்துராமன் — பாரதி — நாகேஷ்

நடிக்கும்

வாசு பிலிம்ஸ் அளிக்கும்

**பூவும் பொட்டும்**

டைரக்ஷன்

தாதாமிராசி



**இங்ஸ்லி பிளாஸா ஸ்ரீ கிருஷ்ணா**

(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருமலை)

ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்

நடித்த

**அதே கண்கள்**


ஈழநாடு, யாழ்ப்பாணம், 7-5-69. 1565

## நாட்டின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறிமாறி ஏமாற்றி வருகின்றன; சிந்திக்க எவருக்கும் உரிமையுண்டு. அரசியல் எல்லோருக்கும் பொதுவானது: தமிழரசு - யு.என்.பி, கூட்டால் தமிழர்பெற்ற பயன் ஒன்றுமில்லை. தமிழ் மக்களின் ஒத்தாசை சிங்கள மக்களுக்கு அவசியம். சிங்களமக்களின் சம்மதத்தின் மூலம் தமிழினம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்'' என்று கூறினார்.

மற்றும் திருவாளர்கள் வீ, பாலசிங்கம், எம். சி. சுப்பிரமணியம், சாண்டோ சாமுவேல் இரத்தினம் ஆகியோரும் பேசினர்.


**ராஜா** 117வது தினம் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா

நடித்த

**ஒளிவிளக்கு**

(ஈஸ்ட்மென் கலர்)

மாதர்களுக்குஅரைக்கட்டணம்



இணுவில்

**ஸ்ரீ காலிங்கனா**

தினசரி: 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30மணி

எம். ஜி. ஆர் -ஜெயலலிதா

நடித்த

**தனிப்பிறவி**



மானிப்பாய்

**வெஸ்லி சினிமா**

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30 மணி

**அக்கா நகோ**

(சிங்களம்)

(இரண்டு தினங்கள் மட்டும்)



**REGAL** at JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m.

Poya, Pre-Poya 10-30 A.M.

Gina Lollobrigida

Sean Connery

in

**Woman of Straw**



From 10-5-69 to 16-5-69

MANOHARA

JAFFNA

Daily

2-30 6-30 & 9-30 P.M.

Pre-Poya Poya 4 Shows

Asah Parekh, Manoj Kumar

Simmi & Paran

in

**Do Badan**

(Eastman color)

Music / Ravi


ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஜோசப் 3 விக்கெட்டுகளையும், தில்லையம்பலம் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்

முதல் இன்னிங்ஸில், யாழ். தெரிவுக் கோஷ்டி, காலி தெரிவுக் கோஷ்டியை விட கூடுதலான ஓட்டங்களைப் பெற்றமையால், அரை இறுதிப் போட்டியில் வினை

## நாவலடி வெற்றி

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் நாவலடி சனசமூக நிலையத்துக்கும் ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்துக்குமிடையில் நடாத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கோப்பாய் நாவலடி சனசமூக நிலையம் 7 அதிகப்படியான புள்ளிகளால் வெற்றியீட்டியது. வலி. கிழக்கு காரியாதிகாரி பகுதியினரால் நடாத்தப்பட்ட இப்போட்டிக்கு கோப்பாய் உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு. சி. சிவப்பிரகாசபிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

## மரதன் ஓட்டப் போட்டி முடிவு

சுழிபுரம், வெள்ளி

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:-

மேற்பிரிவு:- க. நாகேந்திரராசா, எஸ். தனபாலன். க. இராதாக்கிருஷ்ணன்

கீழ்ப்பிரிவு:- எம், பாலசுப்பிரமணியம், பி. ரவிச்சந்திரன். எ. ஜெயக்குமார்.

ராகுகாலம் 9-55— 10-25.

சுபநேரம்- 2-55 — 4-25.

இன்று பிறந்தவர்களுக்கு— மணம் முடிப்போர்க்கு மகிழ்ச்சிக்குரிய ஆண்டு இனப்பகை நீங்கும் இனிமையும் உண்டு. பொதுநலச்சேவை புகழ் தரும் விவசாயிகளுக்கு மந்தநிலை காணும் வெளியூர் பிரயாணம் வெற்றி தரும் ஆண்டாகும்.

மேஷம்- குரு விசுவாசம் சகோதர சுகம்.

ரிஷபம்- வாகன நன்மை வந்திடும் லாபம்.

மிதுனம்- புத்திரர் புகழ் பூமி விருத்தி.

கடகம்- அன்னியவாசம் அசால போசனம்.

சிம்மம்- முகராசி முயற்சியால் உயர்ச்சி.

கன்னி- பங்காளி மேல் நம்பிக்கை பயன்தராது.

துலாம்- தேடி வரும் உறவு கோடி நன்மை தரும்.

விருச்சிகம்- கலாட்டு பாட தயாராக இரு.

தனுசு- வரவில் உயர்வு, நற்பெயர்.

மகரம்- சிந்தனை அதிகம் தாபதும்.

கும்பம்- ஓாமத சித்தி பணவிரயம்.

மீனம்-பேச்சில் வெற்றி பொதுசனமதிப்பு.

- சோதிடகலாநிதி -

திருமலைவேலுப்பிள்ளை

யில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

குருபூசையில் திரு. வடிவேலுசுவாமியார், வட்டார கல்வி அதிகாரி திரு. என். துரைசாமி ஆகியோர் கலந்துகொண்டு பேசுவர்

......

## 'இளைஞர்களின் கையில் நாடு'

சுழிபுரம், வெள்ளி

'எமது நாட்டின் முன்னேற்றம் எமது இளைஞர்களின் முன்னேற்றத்தில் தான் தங்கியுள்ளது. இளைஞர்களால் கட்டுக்கோப்புடன் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எப்போதும் வெற்றியையே கொடுக்கும். இவர்கள் எதையும் முன்யோசனையுடன் செய்ய வேண்டும் என சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக 13-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் திரு. எஸ். நிற்சிங்கம் கூறினார்.

நா சண்முகநாதன் தலைமையில் சித்தங்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கா. வேல்முருகன் பி.ஓ.எல். டாக்டர் க. கெங்காதரப்பிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினர். இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## 'வழிகாட்டியை இழந்து விட்டது'

மன்னார், வெள்ளி

''ஜனநாயகத்தின் வழிகாட்டியை உலகம் இன்று இழந்து தவிக்கிறது. அன்பு, சகோதரத்துவம், மனிதாபிமானம் ஆகியவை ஒருங்கே அமையப்பெற மறைந்த மேதை டாக்டர் ஸாகிர் ஹுசையினின் தார்மீக வழியை நாம் பின்பற்றி வாழவேண்டும்''

காலஞ் சென்ற பாரத ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசையினின் மறைவு குறித்து மன்னாரில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய உதவி அரசாங்க அதிபர் திரு. சோமசுந்தரம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. வி. ஆர். டொமினிக், டாக்டர் எஸ். ஜோன் மார்க், ஓ. கே. சைனுவாப்தீன், திரு. என். எம். சாகுல் ஹமீது, திரு. என். எஸ் ஏ. காதர், திரு. எஸ். சூசைநாயகம் ஆகியோரும் பேசினர். திரு. வேலுசாமி நன்றி தெரிவித்தார்.

மு. பொன்னுத்துரை, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

### பாராட்டுக்குரியவை

பின்வருவனவும் சிறந்த பாராட்டுதல் பெற்றன. 'முல்லைத்தீவில் கல்லுப்புதையலா?', 'கல்லுப் புதையலுக்கு கொள்ளைப் பணச் செலவு', 'நம்ப நட நம்பி நடவாதே,' 'தனம் தோற்றது தந்திரம் வென்றது.

### இன்றைய போட்டி

பின்தரப்படும் கற்பனைச் செய்திக்கு அழகான கவர்ச்சியான, கூடியவரை சுருக்கமான ஒரு தலைப்பை எழுதி உங்கள் சாமர்த்தியத்தை காட்டுங்கள் பார்க்கலாம்.

### இதுதான் செய்தி

'வட மாகாணத்தில் துணுக்காய் என்னுமிடத்துக்குச் சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள குடியேற்றத் திட்டம் ஒன்றில் ஒரு விவசாயி தனது மேட்டு நிலத்தில் கிணறு தோண்டியபோது தண்ணீருக்கு பதிலாக எண்ணை ஊற்றுக்கள் குபீரென்று வெளிப்பட்டன. ஒரு பனை உயரத்துக்குக் குமுறிப் பாய்ந்த சேறு கலந்த எண்ணையை விஞ்ஞானிகள் இப்பொழுது பரிசிலனை செய்துவருகிறார்கள். இதற்கிடையில் குறிப்பிட்ட கிணற்றுக்கு அருகாமையிலுள்ள நிலத்திலும் எண்ணை ஊறலாம் என்ற நம்பிக்கையுடன் கொழும்பு, கண்டி முதலிய இடங்களிலிருந்து பல பெரிய முதலாளிகள் அவ்விடத்துக்கு விரைந்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கியிருப்பதற்கு அந்தக் காட்டுப் பிரதேசத்தில் வீடுகள் இல்லாதமையினால் பல புதிய ஹோட்டல்களும், தங்கு வசதிகளும் மும்முரமாக அமைக்கப்படுகின்றன. தேடுவாரற்றுத் தரிசுநிலங்களாகக் கிடந்த காணிகளுக்குத் திடீரென்று பெரும் கிராக்கியும் வந்துள்ளது.'

### நிபந்தனைகள்

விடைகளைக் கீழ்க்காணும் கூப்பனிலேயே தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். விடைகள் யாவும் 13-5-69க்கு முன் எமக்கு வந்துசேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் எழுதி ஒரே உறையில் வைத்து அனுப்பலாம். அனுப்பவேண்டிய விலாசம்: **செய்தித் தலைப்புப் போட்டி (3). 'ஈழநாடு' த. பெ இலக்கம்: 49, யாழ்ப்பாணம்.** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளவேண்டாம் 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. மிகச் சிறந்த விடைக்கு ஐந்து (ரூ. 5/-) பரிசுப் பணமாக வழங்கப்படும்.

'ஈழநாடு'

செய்தித் தலைப்புப்போட்டி-3

விடை : ..............................

..............................

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................


" ராதா "

**99 & 999 ஜவ்வாது பத்தி**

மங்கள வைபவங்களுக்கு

மகிழ்வூட்டும் சுகந்த நறுமணம் தரும்

99 & 999 ஜவ்வாது பத்திகளை பாவியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்

ஏகவிநியோகஸ்தர்கள்:

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

53, கே கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வியட்னாம் பிரச்னை தீர்வுக்கு

# தேசிய விடுதலை முன்னணி தெரிவித்த திட்டம் பற்றி நிக்ஸன் ஆராய்கிறார்

## யு. எஸ். படைவிலக்கம் பற்றியும் ஆலோசனை

நியூயோர்க், மே 9

**வியட்னாம் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ள புதிய திட்டம் பற்றி அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் வெளிநாட்டு விவகாரம் சம்பந்தமான தமது ஆலோசகர் திரு. கீஸிங்கருடன் ஆராயத் தொடங்கியிருக்கின்றார்.**

**தென்வியட்னாமிலிருந்து அமெரிக்கத் துருப்புகளை மட்டான அளவில் விலக்கிக்கொள்வது சம்பந்தமாக அதிபர் நிக்ஸன்—தென்வியட்னாம் அதிகாரிகளுடன் தனிப்பட்டமுறையில் ஆலோசித்துவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.**

வியட்னாம் பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவென தேசிய விடுதலை முன்னணி புதிய திட்டமொன்றை தெரிவித்துள்ளது. (இது வியட்காங்கியரின் ஓர் அரசியல் அங்கம்.) வியட்னாம் பிரச்னைக்கு முடிவுகாண்பதற்காக பாரிஸில் நடைபெறும் அமைதிப் பேச்சுக்களின்போது இந்த யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. அமெரிக்க, வியட்னாம் பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெறும் 16-வது மகாநாடு இது.

வியட்னாமிலிருந்து அமெரிக்கப் படைகள் முற்றாக விலக்கப்பட வேண்டும். தென்வியட்னாமில் கூட்டு ஆட்சியை ஏற்படுத்தவேண்டும். அங்கு தேர்தல்கள் சுதந்திரமாக ஜனநாயக முறையில் நடைபெறுவதற்கு இந்த அரசாங்கம் ஒழுங்குசெய்யவேண்டும். வெளியார் எவரும் தம் கொள்கைகளை அந்த மக்கள் மீது திணிக்க எத்தனிக்கக் கூடாது.

ராணுவம் அங்கு தங்கியிருப்பது குறித்து வியட்னாம் மக்களே முடிவுசெய்யவேண்டும். இவ்வாறு தேசிய விடுதலை முன்னணி தனது திட்டத்தில் தெரிவித்திருக்கின்றது.

தென் வியட்னாமில் எங்கோரிடத்தில் இரகசியமாக நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இத்திட்டம் பற்றி முடிவுசெய்யப்பட்டதாகப் பாரிஸ் பேச்சுக்களில் கலந்துகொண்ட தேசிய விடுதலை முன்னணியின் உதவித் தலைவர் திருமதி பின் கூறினார்.

தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ள இந்த யோசனைகளை வட வியட்னாமும் ஆதரித்துள்ளது.

தென் வியட்னாம் அதிகாரி ஒருவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் தேசிய விடுதலை முன்னணி கலைக்கப்பட்டு வேறு ஒரு ஸ்தாபனம் நிறுவப்பட்டாலன்றி அவர்கள் தென்வியட்னாம் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ள முடியுமென்று குறிப்பிட்டார்.

### நிக்ஸன் ஆலோசனை

வியட்னாம் அமைதிக்கு தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ள யோசனைகள் குறித்து அமெரிக்க அதிபர் நிக்ஸன் தமது வெளிநாட்டு ஆலோசகர் திரு. கீஸிங்கருடன் ஆலோசனைகள் நடத்தத்தொடங்கியிருக்கின்றார்.

தென் வியட்னாமில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கத் துருப்புகளை மட்டான அளவில் விலக்கிக்கொள்வது சம்பந்தமாக அதிபர் நிக்ஸன் தென் வியட்னாம் அரசாங்கத்துடன் தனிப்பட்டமுறையில் ஆலோசனைகள் நடத்துவதாகக் கூறப்படுகின்றது. வியட்னாம் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற அதிபர் நிக்ஸன் கொள்கையின் ஓர் அம்சமாகவே இந்த ஆலோ...

## 'மார்க்' மதிப்பு 7 சத வீதம் உயரும்

பொன், மே 9.

மேற்கு பெர்லின் அரசாங்கம் தனது மார்க் நாணயத்தின் மதிப்பை 7 சத வீதம் கூட்டுவதற்கு ஆலோசித்துவருவதாகக் கூறப்படுகின்றது.

மார்க்கின் மதிப்பை 7 சத...

மார்க் நாணயத்தின் மதிப்பு டாலர் விலைக்கும் குறைந்து விட்டதாக அவதானிகள் கூறுகிறார்கள், ஆனால் ஐரோப்பிய சந்தைகளில் மார்க் நாணயத்திற்குத் தொடர்ந்து கிராக்கி இருந்து வருவதாகவும் கூறப்...

### சாகிர் ஹுசேன் மரணச்செய்தி தாமதம்;

## இந்திய வானொலிக்கு கண்டனம்

புதுடில்லி, மே. 9

லோக்சபை இன்று கூடியபோது டாக்டர் சாகிர் ஹுசேன் மறைவுச் செய்தியை இந்திய வானொலி காலதாமதமாக வெளியிட்டதாக எதிர்க்கட்சியங்கத்தவர் ஒருவர் குற்றம்சாட்டினார்.

இக் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த ஐ. சே. குஜராத் பெரிய தலைவர்களின் மறைவுச் செய்தியை அதிகாரபூர்வமான அறிவித்தலின் பின்னரே ஒலிபரப்ப வேண்டும், இது இந்தியாவுக்கு மட்டுமல்லாது உலக நாடுகள் அனைத்துக்குமே பொதுவான விதியென்றும் இந்திய பிரெஸ்டர் செய்தி ஸ்தானம் இச் செய்தியை வெளியிட்ட மூன்று நிமிடத்துக்குள் ஜனாதிபதியின் மறைவுச்செய்தி ஒலிபரப்பப்பட்டதென்றும் கூறினார்.

## ஆலய பிரவேச இயக்கத்தில் அனைவரும் பங்குபற்றவேண்டும்

### சுன்னாகத்தில் திரு. மல்லவராச்சி

யாழ்ப்பாணம், சனி

ஆலயப்பிரவேச போராட்டத்தில் சிறுபான்மை மக்கள் மட்டும்தான் பங்குபற்ற வேண்டும் என்பதில்லை. தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளில் அக்கறை கொண்ட அனைவரும் பங்குபற்றவேண்டும்.

கதிரமலைச் சிவன்கோவில் ஆலயப்பிரவேசத்தை ஆதரித்து சுன்னாகத்தில் நடந்த கூட்டத்தில் திரு. டி. எஸ். மல்லவராச்சி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார். திரு. வே. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வி. எம். பொன்னையா பேசும்போது கூறியதாவது தமிழர்கள் பற்பல பகுதியினராக பிரிந்திருப்பதால் நமது உரிமைகளைப் பெறமுடியாமலிருக்கிறது. இந்தப் பிரிவுகள் முதலாளித்துவத்தை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கின்றன நாம் எல்லோரும் முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.

ஆட்சிமன்றம் ஒருபோதும் சிறுபான்மைமக்களின் பிரச்னைகளை தீர்க்காதென்றும் போராட்டத்தின் மூலமே உரிமைகளைப் பெறமுடியுமென்றும் டாக்டர் என். நடராசா பேசும்போது கூறினார்.

திரு. கே. ரி. விவேகானந்தன் திரு. கே. குமாரசாமி உட்பட மற்றும் பலர் பேசினார்கள்.

## 'இப்போதைய கல்வித்திட்டம் நாட்டுக்கு ஏற்றதல்ல'

கோப்பாய், வெள்ளி

எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் கல்வித் திட்டமோ [illegible]வி நிலையோ இன்றைய மாணவர்களுக்கு ஏற்ற தொன்றாகத் தெரியவில்லை எத்தனையோ படித்த பட்டதாரிகள் வேலையற்ற நிலையில் நமது [illegible] [illegible]றார்கள் [illegible] நிலையையும் எமது அரசாங்கத்தின் கல்வித் திட்டத்...

கோப்பாய்தெற்குறோமன் கத்தோலிக்க பாடசாலையில கடந்த 12 வருட காலம் தலைமையாசிரியரா[illegible] கடமையாற்றி இளைப்பாறிய திரு ஏ, மரியாம்பிள்ளைக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கோப்பாய்க் கிராமசபைத் தலை[illegible] திரு. ரி. பரமானந்தராசா மேற்கண்டவாறு கூறினார்.

## "நாட்டின் விடுதலைக்கு சிங்கள தமிழ் மக்கள் சேர்ந்து உழைக்க வேண்டும்"

### கூட்டணி மேதின விழாவில் மாத்தறை எம்.பி.

உடுப்பிட்டி, வெள்ளி

''83 வருடங்களுக்கு முன்னர் திகழ்ந்த ஓர் முக்கிய தினத்தையே இன்று நாம் விழாவாகக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம். மேதினம் தொழிலாளர்களின் உரிமைத்தினம். இத்தினம் தொழிலாளவர்க்கத்தின் தினமாக மட்டுமிராது தேசபக்தர்கள் கொண்டாடும் தினமும் ஆக விளங்க வேண்டும்.

சிக்காக்கோ நகரில் உரிமைப்போரில் தொழிலாளர்கள் சிந்திய செங்குருதியின் தியாகச் சின்னமே மேதினமாகும். இரத்தம் சிந்தியே உரிமையைப் பெற்றுக் கொண்டதால் இன்று செங்கொடி பட்டொளி வீசிப் பறக்கின்றது. இத்தியாகத் திருநாளை உலகத் தொழிலாளர்கள் பூரண உரிமையுடன் கொண்டாடி வருகிறார்கள். தொழிலாளர்கள் சுதந்திரம் பெற வழிவகுத்தது மேதினமாகும்''

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி(மாஸ்கோ)யைச் சேர்ந்தமாத்தறை எம். பி. திரு. பி. வை. துடாவை நேற்று முன்தினமிரவு அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற மேதின விழாவில் பேசுகையில் கூறினார். உடுப்பிட்டித் தொகுதி வாலிப முன்னணி, விவசாயிகள் கழகம், இலங்கைத் தொழிற் சங்கங்களின் கூட்டணி உடுப்பிட்டிக்கிளை, சிறுபான்மைத் தமிழர் மகா சபை உடுப்பிட்டிக்கிளை ஆகியன கூட்டாக இம்மேதினவிழாவை நடாத்தின.

மாத்தறை எம். பி. திரு. துடாவை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''நான் தமிழில் பேச முடியாதிருப்பதற்கு வருந்துகின்றேன். அந்நிய மொழியான ஆங்கிலத்தில் பேச எனக்கு விருப்பமில்லை. ஆதலால் எனது தாய்மொழியான சிங்களத்திலேயேபேசுகின்றேன். இலங்கை விடுதலைபெற்று 21 வருடங்களாகிவிட்டபோதிலும் சொந்த மொழிகளான சிங்களமும், தமிழும் இன்று வரை உரிய அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

### சமஉரிமைக்கு போராடவேண்டும்

இன்றைய ஆட்சிமன்றநடவடிக்கைகளைப் பார்த்தால் சிங்களமொழிக்கும், தமிழுக்கும் கிடைக்கும் மதிப்பா, ஆங்கிலத்திற்குக் கிடைக்கும் மதிப்பா உயர்ந்தது என்பதை உணரலாம். நாட்டில் ஆங்கில ஆதிக்கம் முதலிடம் பெற்று விளங்குகின்றது. நமது தாய் மொழிகளான சிங்களமும், தமிழும் சம இடம்பெறச் சேர்ந்து போரிடவேண்டும் ஆட்சிமன்றத்தில் முதல் முறை உறுப்பினராகும் ஒருவர் பலமைல் தூரத்திலுள்ள மகாராணிக்கு விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

இவற்றிலிருந்து இலங்கை பூரண விடுதலை, சுதந்திரம் பெறவில்லை என்பது தெளிவாகியுள்ளது. ஏகாதிபத்தியம், பொருளாதாரச் சுரண்டல் ஆகியவற்றை ஒழித்துத் தேசிய ஒற்றுமையுடன் நாடு விடுதலைபெறச்சிங்கள-தமிழ் மக்கள் உழைக்கவேண்டும்.

தொழிலாளர் வர்க்கம் தமது நலன்களைப் பெற முதலாளித்துவ ஆதிக்க கட்சிகள் மூலம் முயல்வது வீணானது. இடதுசாரி இயக்கங்களுக்கு ஊடாகவே தொழிலாளர்கள் உரிமைகளைப் பெறமுடியும். 1965-ம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறிய தேசிய அரசாங்கம் இன்னல்களைத் துடைப்பதாக உறுதி கூறியது. ஆனாலும் கிடைத்ததோ ஏமாற்றம்தான். தேசிய அரசாங்கத்தை நம்பித் தமிழரசுக்கட்சியினரும் ஏமாந்துவிட்டனர்.

### 6லட்சம் பேருக்கு வேலையில்லை

இளைஞர்கள் தொழில் வாய்ப்புக் கிடைக்காததால் ஐ.தே.கட்சியிலிருந்து விலகி கூட்டு முன்னணியுடன் சேர்ந்து தமது நல்வாழ்வுக்காக அணிதிரளுகிறார்கள். அரசாங்க புள்ளிவிபரப்படி ஆறு இலட்சம்பேர் வேலையற்றிருக்கின்றனர்; 1971-ம் ஆண்டு வேலையற்றோர் தொகை பத்துஇலட்சமாக அதிகரிக்கலாம். இவ்வபாயம் தேசிய அரசாங்கத்தின் ஆட்சியினாலேயே ஏற்பட்டுள்ளது' வேலையில்லாத் திண்டாட்டத்தை மேடைகள்மூலம் போக்க முடியாது. முதலாளித்துவ சமூக அமைப்பில் மனிதாபிமான, வீட்டு வேலை, சுகாதாரம் ஆகியவற்றில் ஊழல்கள் காணப்படும். இதற்கு மாறாகச்சுதந்திரமான சுரண்டல்அற்ற நாடுகளில் இப்பிரச்னைகள் ஒழிக்கப்பட்டுள்ளன.

நாம்வர்க்க அடிப்படையில் ஐக்கியத்தை வளர்த்து வருகின்றோம். சிங்கள தமிழ்மக்கள் ஒருவரையொருவர் மதித்து, நேசக்கரம்நீட்டி ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். இதுவே சுபீட்ச வாழ்விற்கு வழி. சோவியத் நாட்டில் சமதர்மம் நிலவுவதால் அங்கே எவ்வித பிரச்னையுமில்லை. வித்தியாசங்களும் கிடையாது, எதிர்காலத்தில் இலங்கையை வழிநடத்த வேண்டிய பொறுப்பு இளைஞர்களிடந்தான் விடப்பட்டுள்ளது.''

விழாவிற்குத் தலைமை வகித்த திரு. பொன் குமாரசாமி பேசுகையில் ''அரசியலில் நேர்மை வேண்டும். தேசிய அரசாங்கம் முதலாளிகளின் நன்மைக்காகவே பாடுபடுகிறது, பலவித விவசாயத் திட்டங்களில் வட பகுதி புறக்கணிக்கப்பட்டு விட்டது. நாம் மொழிக்காக உரிமைக்காகச் சத்தியாக்கிரகம் முதலிய போராட்டங்கள்மூலம் சிங்கள மக்களின் ஆதரவை நிச்சயம் பெறமுடியும். மொழியை விடப் பொருளாதாரப் பிரச்னை உடன் தீர்க்கப்படவேண்டும்.

இலங்கையில் பஸ்சேவை தனியாரிடமிருந்தபோது 3200 தொழிலாளர்கள் இருந்தனர். தேசியமயமாக்கியபின்னர் 45,000 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர். துறைமுகத்தை தேசியமயமாக்குவதற்கு முன்னர் 32 000 பேர் வேலைபார்த்தனர் இன்று 120000 பேர் தொழில் பார்க்கின்றனர்.''

வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் 'தேசிய சிறுபான்மை இனம் இம்மேதினத்தைக் கொண்டாடும்போது தமிழ்க்கட்சிகள் தமிழினத்தை

(2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் தனது மார்க் நாண ணத்தின் மதிப்பை 7சத வீதம் கூட்டுவதற்கு ஆலோ சித்துவருவதாகக் கூறப்படு கின்றது

மார்க்கின் மதிப்பை 7சத வீதம் அதிகரிக்க வேண்டு மென்று மேற்கு ஜெர்மன் பொருளாதார அமைச்சர் ஆலோசனை கூறியிருக்கி ருர். ஆனல் இந்த மதிப்பு உயர்வை மேற்கு ஜெர்மன் பிரதமர் டாக்டர் கீசங்கர் விரும்பவில்லையென்று கூறப் படுகின்றது.

...ந்து விட்டதாக அவதானி கள் கூறுகிருர்கள், ஆனல் ஐரோப்பிய சந்தைகளில் மார்க் நாணயத்திற்குத் தொடர்ந்து கிராக்கி இரு ந்து வருவதாகவும் கூறப் படுகின்றது.

டாக்டர் கீசங்கர் மார்க் கின் மதிப்பைக் கூட்டுவதா இல்லையா என்பதுபற்றி ஏற்கனவே தமது அதிகாரி களுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ளார். இன்று அவர் தமது அமைச்சர் அவையைக் கூட்டவிருக்கின் ருர்.

# தகப்பனும் பிள்ளைகளும் ஏழுபேர் தற்கொலை

## செட்டியார் ஏமாற்றினுராம்

திருச்சி, மே 9

திருச்சியில் ரெங்க ாராவ் என்பவரும் அவ ரது ஆறு பிள்ளைகளும் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டார்கள்.

செட்டியார் ஒருவரிடம் பணம் கொடுத்து வநத தாகவும் அந்தப் பணத் தைச் செட்டியார் திருப் பித் தராததால் ரெங்கா ராவ் மனமுடைந்ததும் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகின்றது. திருச்சி கலெக்டருக்கு ரெங்காராவ் எழுதியுள்ள ஒரு கடிதத் தில் இதைத் தெரிவித்திருக் கிருர்.

மதுரையை சேர்ந்தவர் ரெங்காராவ். இவர் குடும் பத்துடன் திருச்சி வந்து அங்கு சாயத் தொழில் செய்து வந்தார்.

தனது குழந்தைகள் லட் சுமி நாராயணன் (வயது 10) தாமோதரம் (வயது 8) கிருஷ்ணமூர்த்தி (வயது7) ராமமூர்த்தி (வயது 5), தன லெட்சுமி (வயது3)' சரஸ் வதி (வயது2) ஆகியோரு க்கு விஷம் கொடுத்துத் தாமும் உட்கொண்டு இவர் கள் 7பேரும் வீட்டில் செத் துக் கிடந்தார்கள்

இதுபற்றிப் பொலிசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பொலிசார் விரைந்துவந்து பிணத்தைக் கைப்பற்றினர். ரெங்காராவ் போட்டிருந்த சட்டையில் இருந்து ஒரு கடிதத்தைக் கைப்பற்றி ஞர்கள். அந்தக் கடிதத்தில் அவர் எழுதியிருப்பதாவது- திருச்சி கலெக்டர் அவர் கள் சமூகத்திற்கு எம்.ரெங் கராவ் எழுதுவது,

யாயாருக்கும் தெரியாமல் உறையூரில் ஒரு செட்டியாரி டம் 1-1-56ல் இருந்து மாதாமாதம் ரூ 200 வீதம் கொடுத்து வந்தேன். 31-3-69 முடிய 29400 ரூபாய் கொடுத்து இருந் தேன். அதை திருப்பிக் கேட்டேன். அவர் தருகி றேன் என்ருர்.

அவர் மகள் 10,000ரூபா ய்க்கு ஒரு ஏல சீட்டு நடத் துகிருர். அதில் நானும் ஒரு மெம்பர். அந்த சீட்டை நான் கேட்டேன். ஜாமீன் கொடுத்து எடுத்துக்கொள் என்ருர்கள். நானும் ஜாமீன் கொடுத்துப் பணத்தை எடுத்தேன்.

அதன்பின் செட்டியாரி டம்போய் பணம் கேட் டேன். பணம் தராவிட் டால் குடும்பத்துடன் சாவேன். என்றேன்.

அதற்கு அவர் நீசெத்தால் எனக்கென்ன? நீ கொடுத் தது யாருக்குத் தெரியும் நீ கொடுத்தேன் என்ருல் எவன் நம்புவான்? என் வார்த்தைகளைத்தான் நம்பு வார்கள். என் கடை பாகம் பிரியும்போதுதான் பணம் கொடுக்க முடியும். அதற்கு இடையில் பணம்கேட்டு வராதே என்று கோபத் தோடு கூறிவிட்டார்.

இதனுல் நான்மனமுடைந் தேன் விஷயத்தை என்மனை வியிடம் சொன்னேன். தாம ரையிலைத் தண்ணீராய் தத் தளித்தேன். வாழ்வதைவிட சாவதே மேல் என்று நினைத் தேன்.

6-5.69-ல் நாங்கள்சாவோ மென்று உங்களுக்குபத்திரம் மூலம் தெரிவித்துக் கொள் கிறேன். செட்டியாரிடம் பணத்தை வாங்கி கடன் களை கொடுத்ததுபோக மீதிபணத்தை மக்கள் மத் தியம் (வயது 15), சாந்தா ராம் (வயது 13) ஆகியோ ரிடம் கொடுக்கும்படி தாழ் மையுடன் கேட்டுக் கொள் கிறேன். என்மனைவி நிறை மாத கர்ப்பிணி என்பதை யும் கூறிக்கொள்கிறேன்.

...கள் நடத்துவதாகக் கூறப்ப டுகின்றது. வியட்னும் பிரச் னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற அதிபர் நிக்ஸன் கொள்கையின் ஓர் அம்சமாகவே இந்த ஆலோ சனைகள் நடத்தப்படுவதா கக் கூறப்படுகின்றது.

### போர் நிறுத்தம்

புத்தர் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இம் மாதம் 30-ந் திகதி வியட்னு மில் போர் ஓய்வைக்கடைப் பிடிப்பதென்று தென்வியட் னுமும் அமெரிக்காவும் முடிவுசெய்துள்ளன. வியட் காங்கியருக்கு இதுசம்பந்த மாக விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லையாம்.

# வில்ஸன் உறுதி

லண்டன், மே 9

அங்கீகாரம் பெருத வேலை நிறுத்தங்களைத் தடைசெய் வது சம்பந்தமான தமது திட்டத்தை அமுலாக்கு வதில் பிரிட்டிஷ் பிரதம மந் திரி திரு. வில்ஸன் உறுதி யாகவிருக்கிருர். இதற் கிடையில் தொழிற்கட்சி அங்கத்தவர்கள் திரு. வில் ஸனின் விடாப்பிடியைக் கண்டு கலக்கமடைந்திருக் கிருர்கள்.

கட்சியின் பொது அங்கத் தவர்களின் எண்ணத்துக்கு மாருகச் சட்டங்களைத் திணிக்கக்கூடாது என்று தொழிற்கட்சியின் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் குழு வின் தலைவர் எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

### தொழிற்கட்சி தோல்வி

இங்கிலாந்திலும், வேல் ஸிலும் நடைபெற்ற உள் ளூராட்சித் தேர்தல்களிலும் தொழிற்கட்சிக்குப் பெரும் தோல்வி ஏற்பட்டிருக்கின் றது. சுமார் 600 உள்ளூ ராட்சி மன்ற ஸ்தானங் களைத் தொழிற்கட்சி கோட்டை விட்டிருக்கின் றது.

# பொலிசாருக்கு முன் அறிவித்தல்

கோட்டை, வெள்ளி

இந்த வருடஇறுதியில் இடமாற்றம் செய்யப்பட விருக்கும் பொலிஸ் உத்தி யோகஸ்தர்களுக்கு 5 மாதங் களுக்கு முன்னராகவே முன்னறிவித்தல் கொடுக்கப் பட்டுள்ளது.

...தொன்ருகத் தெரியவில்லை எத்தனையோ படித்த பட்ட தாரிகள் வேலையற்ற நிலை யில் நமது மத்தியிலிருக் கிருர்கள். அவர்களது நிலையையும் எமது அரசாங் கத்தின் கல்வித் திட்டத் தையும் தற்காலத்தில்கல்வி பயிலும் மாணவர் தரத்தை யும் ஒருமித்து நோக்கும் பொழுது வருங்கால வாலி பர்களுக்கு உத்தியோக மென்பது சாத்தியமற்றதா கவே காணப்படுகிறது.

# இஸ்ரேலிய விமானம் ஊடுருவல்

டெல்அவிவ், மே 9

இஸ்ரேலிய'கொமாண்டோ' துருப்புகள் நேற்று ஜோர் டானுக்குள் ஊடுருவி அர புக் 'கொமாண்டோ' நிலை களைத் தாக்கிவிட்டுப் பத்திர மாகத் திரும்பிவிட்டதாக இஸ்ரேலியர் அறிவித்துள்ள னர்.

இஸ்ரேலிய விமானங்கள் ஜோர்டானுக்குள் போர் நிறுத்த எல்லையைத் தாண்டி உட்பிரவேசித்ததாகவும் அவை துரத்தியடிக்கப்பட்ட தகாவும் ஜோர்டானியர் கூறினுர்கள்.

### இஸ்ரேலிடம் அணுகுண்டு

இஸ்ரேல் அணுகுண்டு தயாரிக்க ஆரம்பித்திருப்ப தாகக் கனேடியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட் டிருந்ததை இஸ்ரேல் மறுத் திருக்கின்றது. இஸ்ரேல் அணுகுண்டு தயாரிக்கவில்லை மேற்காசியாவில் அணு குண்டை உபயோகிக்கும் முதல் நாடு இஸ்ரேலாக இருக்காதென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

# இஸ்ரேல் அணுகுண்டு தயாரிக்கிறது

டெல்அவில்,மே 8

இஸ்ரேல் அணுகுண்டு தயாரிப்பில்ஈடுபட்டுஉலகத் தின் ஆருவது வல்லரசு செக்கு உயர்ந்துவருவதாக மேற்குஜேர்மன் பத்திரி க்கையொன்று கூறியதாக அறிவிக்கப்பட்டது.

நிகோபாலைவனத்திலு ள்ள ஒரு தொழிற்சாலையில் 5 அணுகுண்டுகள்வரை இஸ்ரேல் தயாரித்துள்ளதா கவும்,இந்தத் தகவல்கள் யாவும் நேரடியாக கணக்கி டப்பட்டதாகவும் அப்பத்தி ரிக்கை மேலும் தனது செய் தியில் கூறியிருந்ததாம்.

...திரு ஏ, மரியாம்பிள்ளைக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கோப்பாய்க் கிராமசபைத் தலைவர் திரு. ரி. பரமானந்தராசா மேற் கண்டவாறு கூறினுர்.

மேற்படி பாடசாலை மைதா னத்தில் திரு. எஸ். கபிரி யேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு பரமானந்தராசா மேலும் பேசுகையில், நமது மத்தியிலுள்ள சமூகப்பிரச் னைகள் பல அழிந்தொழிந்து போகும் காலம் வெகுதூரத் திலில்லை. எதிர்காலச் சந் ததியில் இப் பிரச்னைகளுக்கு இடமிருக்க மாட்டாதென வும் ஆனல் இன்றுள்ளநிலை யில் அமைதியுடனும் ஒற் றுமையுடனும் இப் பிரச் னையை தீர்க்கவேண்டியுள் ளது அவசியமெனவும் கூறி ஞர்.

கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிர வேலுப்பிள்ளை, கோப்பாய் பொலிஸ்நிலைய அதிபர் திரு என். கே. தர்மபால, திரு. புதுமைலோலன் உட்பட மற்றும்பலர் பேசினர்.

# எம். பி. திறந்துவைத்தார்

கோப்பாய், வெள்ளி

அச்செழுவில் அமைக்கப் பட்டுள்ள புதிய உபதபால் நிலயம் நேற்று முன்தினம் கோப்பாய் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிர வேலுப்பிள்ளையால் திறந்து வைக்கப்பட்டது.

அச்செழு கிராம முன் னேற்றச் சங்கத் தலைவர் திரு. எஸ். வைரமுத்து தலை மையில் நடைபெற்ற இவ் விழாவில் உடுவில் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம், வடபகுதி தபால் அத்தியட்சகர் திரு. ரி. தர்மலிங்கம், வலி-கிழ க்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை ஆகியோருட் பட மற்றும் பலர் பேசினர்.

# மணிக்கூட்டுடன் செல்லும் கர்ப்பிணிகள்

அல்லைப்பிட்டி, வெள்ளி

வேலனை அரசினர் பிரசவ விடுதியில் நடைபெறும் பிர சவங்களின் நேரத்தை கணக்கிடுவதில் மிகுந்த சிர மம் ஏற்படுகிறதாம். இங்கு மணிக்கூடு ஒன்று இல்லா ததே இதற்குக் காரணமெ னக் கூறப்படுகிறது.

இங்கு பிரவசத்துக்குவரும் தாய்மார்கள் தங்களுடன் மணிக்கூடு ஒன்றையும் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம்.

...தின் ஆட்சியிலேயே ஏற் பட்டுள்ளது' வேலையில்

...முக்கட்சிகள் தமிழினத்தை


(2-ம் பக்கம் பார்க்க)


# கையிருப்பிலே!


# டேவிட் பிரவுண்

770-36 BHP
ரூ. 18750/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)

880-46 BHP
ரூ. 20500/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)



அத்துடன் உறுதியுடன் உருவாக்கப்பட்ட



3முதல்3½ தொன் நிறை கொள்ளும் உயர்த்தக்கூடிய இழுவை வண்டி

தொடர்பு கொள்ளுங்கள்.

ரோலன்ஸ் (ட்ராக்டர்கள்) லிமிட்டெட்

ரோலன்ஸ் லிமிட்டெட் (துணைக் கம்பெனி) டீட் ஸ்ரேட் கொழும்பு 7.

HOUSE OF R ROWLANDS

SPL-R-T-1

மணிவாக்கு

பொருளாதார சமத்துவம்தான் அஹிம்சைச் சுதந்திரத்தின் உயிர்நாடி. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையேயுள்ள நிரந்தரப் பூசலை அகற்றுவதுதான் பொருளாதார சமத்துவத்திற்கான ஒரே வழி. — மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷ சித்திரை மாதம் 28-ந் திகதி (10-5-69)


## மாணவ சமுதாயம்

கட்டுப்பெத்தை தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரிக் கதவுகள் மூடப்பட்டு அங்கிருந்த 200 மாணவர்களும் பொலிஸாரின் உதவியுடன் வெளியேற்றப்பட்ட செய்தி யாரும் மகிழ்ச்சியடையக் கூடியதல்ல. மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு திருப்தியாக இல்லையென்றும் இது பற்றி அவர்கள் தெரிவித்த புகார்கள் குறித்து கல்லூரி நிர்வாகம் கவனம் செலுத்தவில்லையென்றும் இதன் விளைவாக மாணவர்கள் கிளர்ச்சி செய்ததில் கல்லூரித் தளபாடங்கள் சேதமடைந்ததாகவும் இதைத் தொடர்ந்தே மாணவர்களை வெளியேற்றிக் கல்லூரி மூடப்பட்டதாகவும் இச்சம்பவத்துக்கு விளக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்னதான் விளக்கம் கூறப்பட்டாலும் கட்டுப்பெத்தைக் கல்லூரிச் சம்பவம் மாணவ சமுதாயத்தில் அதிகரித்து வரும் விரக்தி மனப்பான்மைக்கு ஓர் அறிகுறியென்றே கொள்ளவேண்டும்.

இவ்வருடம் முதல் தவணை விடுமுறை தினங்கள் குறைக்கப்பட்டதைப் பற்றியும் வெய்யிலின் அகோரத்தைக் குழந்தைகள் தாங்க முடியாமல் அவதிப்படுவதையும் கல்விப் பகுதியினர் கவனிக்காமல் தங்கள் வசதிக்கேற்ப விடுமுறைதினத்தைக்குறைத்ததையும் குழந்தைகள் அளவுக்கதிகமான புத்தகங்களைச் சுமந்துகொண்டு திரியவேண்டியிருப்பதுடன் அவர்களுக்கு வீட்டு வேலைப்பளுவையும்கூட்டுவதாகவும் சென்றசிலவாரங்களாகப் பெற்றோரும் மற்றோரும் பத்திரிகைகளில் கடிதங்கள் எழுதிவந்திருக்கின்றனர். பாடசாலையில் கொடுக்கப்படும் வீட்டுவேலைகள் தவிர இப்போது தமிழ்மொழி மூலம் கல்விபோதிக்கும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே

தனிப்பட்ட முறையில் கல்வியூட்டுவதற்காக வீட்டில் பெற்றோரும் மாணவர்களுக்கு மேலும் மேலும் சுமையை அதிகரிப்பதாக சகவர்த்தமானியான 'உதயதாரகை' எழுதியிருப்பது முற்றும் உண்மையே.

மாணவர்களின் இன்றைய அவல நிலைக்கும் அதிருப்திக்கும் கல்வி அமைச்சையோ கல்வி இலாகாவையோ மட்டும் குறைகூறுவதில் பயனில்லை. இன்றைய கல்வித்திட்டம்தான் இவற்றுக்கெல்லாம் காரணமென்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல. அந்நிய ஆட்சிக் காலத்தில் அவர்கள்தமது வசதிக்கேற்பவும் தமதுதேவைக்கேற்பவும்வகுத்துக்கொண்ட கல்வி முறைதான் நாடு சுதந்திரமடைந்து இருபதாண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நடைமுறையிலிருந்து வருகிறது. ஒவ்வொரு அரசாங்கமும் ஆட்சிக்கு வந்ததும் கல்வி அமைச்சர்கள் 'உலக வலம்' வந்து நாட்டுக்கேற்ற கல்வித்திட்டம் தயாரிக்கப்போவதாகச் சொல்லி வந்துள்ளனர். ஆனால் இது வரை செயலில் எதுவும் நடைபெறவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் செய்யப்பட்ட மாறுதல்கள் மேலும் மேலும் கல்வியில் சிக்கலையும் குழப்பத்தையும் தான் ஏற்படுத்தியிருக்கின்றன.

மகிழ்ச்சியும் திருப்தியும் உள்ள இன்றைய குழந்தைகள், மாணவர்கள்தான் நாளை நாட்டுக்குத் தலைமை வகித்து முன்னேற்ற முடியும். இதற்கு மாணவர்களின்- குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி நாட்டுக்கேற்ற கல்வித்திட்டத்தை வகுப்பதுடன் மாணவ சமுதாயத்தை மன நிறைவுள்ள சமுதாயமாக

இன்று அப்பர் சுவாமிகள் குருபூசை

# சைவசமய ஆசாரியருள் அப்பர்சுவாமி முதன்மையானவர்

கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர்
திரு. மு. சோமசுந்தரம் செட்டியார்

சைவசமய ஆசாரியர் நால்வர். இவருள் ஒருவர் அப்பர் சுவாமிகள். இவர்கள் தசமார்க்கத்தை நடத்திக்காட்டியவர். 81 ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்தவர்கள். பெரும்பகுதி சமண சமயத்தில இருந்து உழன்றூர். நல்ல சைவ சமயத்திலே பிறந்திருந்தும் நம்பர் அருளாமையால் சமண சமயம் சேர்ந்தார். பல பிரசாரங்கள் அங்கு செய்து அச்சமயத்தை வளர்த்தார்.

இவர் தமக்கை திலகவதியார் என்பவர். தான் தனக்கும் பெற்றோர்களால் நியமிக்கப்பெற்ற கணவர் கலிப்பகையார் என்பவர் யுத்த காலத்தில் உயிர்நீத்தார். அவருடனே தானும் இறக்கத் துணிந்த காலத்து தம்பி வேண்டுகோளுக்கிணங்கி விதவைக் கோலத்துடன் திருவதிகைவீரட்டானத்தில் சரியைத்தொண்டு செய்து வந்தார். தன் தம்பி சமணர் சமயம் சார்ந்திருப்பதை எண்ணி வருந்தி சிவபெருமானிடம்விண்ணப்பித்தார்.

இறையருளால் அப்பர் சுவாமிகளுக்குக் கொடிய சூலைநோய் உண்டாகியது. மருந்தாலும் மந்திரத்தாலும் தீரவில்லை. ஆகவே அப்பர் சுவாமிகள் புறப்பட்டுத் தமக்கையிடம் வந்து அவர் திருவடிகளில் வீழ்ந்துவணங்கித் தன்னை மன்னித்து ஆட்கொள்ளுமாறு வேண்டினார். அம்மையார் திருநீற்றைஐந்தெழுத்தை ஓதிக்கொடுத்து அணியச்செய்து கோயிலுக்குள் அழைத்துச் சென்று பரமேசுவரனை வணங்கப்பணித்தார். வணங்கினதும் சூலை நோயும் நீங்கியது தேவாரம் பாடும் ஞானமும் உண்டாகியது. அ போது முதல் முதலாகப்பாடிய திருப்பதிகம் 'கூற்றுயினவாறு' என்பதாகும்.

பிறகு சமணர் இவரைப் பலவகையில் துன்புறுத்தினார்கள். இறையருளினல் எல்லாத் துன்பங்களினின்றும் கரையேறினார். பல திருப்பதிகம் பாடினார் இவைகளுக்குத் 'தேவாரம்' என்று பெயர். மொத்தப் பதிகங்கள் 49,000 என்பது வரலாறு. ஆனால் நமக்குத் தற்போதுகிடைத்துள்ளவை 313 பதிகங்களாம். இவைகளை நான்காம், ஐந்தாம் ஆறும் திருமுறைகளாக வகுத்தனர் நம்பியாண்டார் நம்பிகள்.

இவற்றையோதிஅதன்படி நடப்பின் இம்மை மறுமைப் பலன்களைப் பெறுவதுஉறுதி தேவாரப் பண்கள், திருமேலிசை, திருவிருத்தம், திருகுறுந்தொகை, திருத்தாண்டகம் என்னும் சிறப்புவகையில் அமைந்துள்ளன. இப்பாடல்களில், சரித்திரக் கருத்துக்கள், நீதிகள், பழமொழிகள், வாழும் வகைகள், செய்யவேண்டிய கடமைகள், கடவுளின் பரத்வம், பலபுராணவரலாறுகள் நகைச்சுவையுடைய பாடல்கள், இன்னும்பல அருட்பாடல்கள் உண்டு.

இவற்றுள் ஒன்று 'திருஅங்கமாலை' என்பது ஆகும். இதனைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் "செல்கதி காட்டிடமபாற்றுந் திருஅங்க மாலையும்' உள்ளிட்டு எல்லையில் பன்மைத்தொகையும் இயம்பினர் ஏத்தியிருந்தார்.

இவருடன் வாழ்ந்தவர்கள் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநீலநக்கநாயனார், முருகநாயனார், சிறுத்தொண்டநாயனார், குங்குலியக்கலயநாயனார், குலச்சிறையார் நெடுமாறபாண்டியர், மங்கையர்க்கரசியார்' திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோர் வாழ்ந்தகாலம் 7-ம் நூற்றுண்டின்பிற்பகுதி - தம்வாழ்நாளில் பெரும்பகுதி சமணத்தில்செலவிட்டுவிட்டார்கள்.

சித்திரைச் சதய நன்னாளில் திருப்புகலூரில் 'எண்ணுகேன்' என்று தொடங்கும் திருத்தாண்டகத்தைப் பாடி இறையருளைப் பெற்றூர்.

'மண்முதலாம் உலகேத்த
மன்னுதிருத் தாண்டகத் [தைப்
புண்ணியா உன்னடிக்கே
போதுகுன்றேன் எனப் [புகன்று
நண்ணரிய சிவானந்த
ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ்
ஆண்டஅரசு அமர்ந்திருந் [தார்.

## எம்.பியின்முயற்சி பயனளித்தது
### இடமாற்றம் ரத்து

யாழ்ப்பாணம், சனி

பளை மகாவித்தியாலயத்தின் விவசாயப் பயிற்சி ஆசிரியரின் இடமாற்றம் கல்வி அமைச்சினல் பின்போடப்பட்டுள்ளது.

விவசாயத்தை முக்கியமான பாடமாகக் கொண்ட இவ்வித்தியாலயத்துக்கு வேறொரு விவசாய ஆசிரியரை நியமிக்காமல், கடமையாற்றிய ஆசிரியரை இடமாற்றம் செய்ததைக் கண்டித்து கிளிநொச்சி எம். பி திரு கா. பொ இரத்தினம் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகும்.

கல்வி அமைச்சின் உதவிக் காரியதரிசியான திரு. கமகே. திரு. கா. பொ. இரத்தினம் எம். பிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்ட விவசாய ஆசிரியரின் இடமாற்றம் பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (கா. நி.)

## நியமனம்

கோப்பாய், வெள்ளி

அச்செழுவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உப தபால் நிலைய அதிபராக திரு. எஸ். மகாலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் அஞ்சலகநிர்வாகத்தின்கீழ் இயங்கும் இந்நிலையமேற்பார்வையாளராக கோப்பாய் தபால் நிலைய அதிபர் திரு. ரி. எஸ். நடராசா கடமையாற்றுவார்.

# 'மொழிப்பற்றும் விருப்பும் வெறியாக மாறக்கூடாது
## இலக்கண சுவாமிகள் பூஜையில் சித்தாந்த வித்தகர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

"தமிழ் மொழிமீது ஒவ்வொரு தமிழனுக்கும் பற்றும், விருப்பமும் ஏற்படவேண்டும் இந்தப்பற்றும் விருப்பமும் வெறியாக மாறக்கூடாது. வெறியாக மாறினல் த... கள் மீது ... டும்."

... திப் பேறு பெறவும் நன்மார்க்கங்களாகும்.

நிறையப் படித்தால் மட்டும் போதாது. படித்ததன் பயனைப் பெற திருக்குறள் காட்டும் வழியைப்பின்பற்ற வேண்டும். கடவுளை ... ால் படித்த ... எந்தப்பயனுமே யில்லை

பெருமான்தான். நாவலர் பெருமான் தான் பிறந்த நாட்டைவிட்டு பாரத நாட்டுக்குப் புகுந்ததுபோலத்தான் இலக்கணசுவாமிகளும் பிறந்தநாட்டைவிட்டு பாரதத்திற்குப் புகுந்து தமிழும் சைவமும் தழைக்க தொண்டாற்றினார் என்றும் சோமசுந்த...

## புதிய நிர்வாகிகள்

அல்லைப்பிட்டி, வெள்ளி

நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்தின் மூன்றாவது ஆண்டுக்கூட்டம் நெடுந்தீவு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்...

## ஐயாறன் எழுதுவது

இன்று அப்பர் சுவாமிகளின் குருபூசை, சைவ உலகுக்கு மிகப்புனிதமானநாள்.

சைவசமய குரவர்களுள் மதம்மாறி பின்னர் சூலைநோய் கண்டு, மீண்டும் சைவத்துக்குத் திரும்பியதால். பல கொடுமைகளுக்கும் உட்பட்டு "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று சைவத்தின் மாண்பினை முழங்கிய வீரர் அவர்.

சிறிதுநேரமும்வீண் பொழுது போக்காமல் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று பயனை எதிர்பாராமல் உழவாரப்பணி செய்தும், தெய்வபக்தியைப் பரப்பியும் வந்த கர்மயோகி.

எல்லா உயிர்களும் இறைவன் மயமென்றும், ஆண், பேண் அனைத்தும் அம்மை அப்பர் வடிவங்களென்றும் அதுவே கைலாசக் காட்சிஎன்றும், கண்டு எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்திய மகான். இறைவன் தமக்கு அருள் புரிந்த கருணையை உருகி உருகி தீந்தமிழுல் பாடி, தாம் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெற நல்கியிருக்கின்றூர்கள். சிறப்பாக நமது இலங்கையை ஒவ்வொரு பதிகத்திலும் பாடி இந்தியா— இலங்கை ஒற்றுமையைப் பலம்படுத்தியவர்.

திருவாசகத்தைப் படித்துவிட்டு அதை போப் என்ற பாதிரியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அப்பர் சுவாமிகளின் தேவார திருத்தாண்டகங்களும் இப்படியே மொழிபெயர்க்க வேண்டியவை. தேவாரங்கள் தமிழர்களுக்காக மட்டுமன்றி, உலக மக்கள் அனைவரின் நன்மைக்காகவும் பாடப்பெற்றவை. ஆங்கிலம், சிங்களம் உள்ளிட்டு பல உலக மொழிகளிலும் இவை மொழிபெயர்க்கப்படின். மேன்மைகொள் சைவநீதியின் மாண்பை வெளிஉலகம் அறிந்து பயன் பெற முடியும்.

வேறு ஒன்றுமில்லா விடினும், சைவசமயத்திலுள்ளவர்களை காட்டுமிராண்டிகள் என்று நினைத்து மதமாற்றம் செய்யவேண்டுமென்று நடக்கும் வீண் முயற்சிகளாவது தடைபடலாம்.

இந்தமொழிபெயர்ப்புப் பணியை சைவசமயத்தவர் தான் மேற்கொள்ளவேண்டும். சைவத்தின் உண்மையை விளக்கும் முக்கிய பாடல்களைத் தெரிவுசெய்து அவற்வற முதலில் மொழி பெயர்க்கலாம். இது மிகக் கடினமான வேலைதான். என்றாலும் இது எவ்வளவு முக்கியமான தென்பதை விளக்கத தேவையில்லை.

திருப்பதியிலே இந்து தர்மத்தைப் பிரசாரம் செய்ய "பிரதிஷ்டானம்" என்ற புதிய ஸ்தாபனத்தை ஸ்ரீகாஞ்சி ஆசாரியார் சென்றவாரம் ஆரம்பித்துவைத்துள்ளாகள். இந்துநெறி என்பது இந்துக்களுக்கே தெரியாது. தெரிந்தவர்களிலும் அதைப் பின்பற்றுகிறவர்கள் எவ்வளவு பேர்?

0 0 0

அன்பே சிவம் என்பதை மறந்து, அல்லது வாயளவில் சொல்லிவிட்டு, நேர்மாறுக சைவசமயிகளே நடப்பதாயின் சைவமும், இந்துசமயமும் எப்படி வளரமுடியும்? அன்பற்ற மனப்பான்மைதான் மதமாற்றங்களுக்கும் பெரிதும் காரணமாகவுள்ளது. சைவத்தின் உண்மை நெறியை முதலில் சைவர்களுக்கே உணர்த்துவது மிகவும் அவசிய பணியாகும். அப்பர்சுவாமிகள் தமது திருமுறைகள்மூலம் கூறியுள்ள உண்மைகளின்படி சைவசமூகம் நடப்பின், இன்று சைவசமூகத்தின் சங்கடங்கள் பெரிதும் தீரும். அதற்கு அவர் அருள்செய்வாராக!

0 0 0

எண்ணுகேன் என்சொல்லி
எண்ணுகேனே எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால், கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன் கழலடியே கைதொழுது காணின் அல்லால், ஒண்ணுளே. ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன், புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

— அப்பர் அடிகள்.

[களைகண்-துணை; ஒண்ணுளே - ஓர் உடலினுள்ளே

# சுப்பிரிண்டனின் உத்தரவை மீறினராம் பஸ் கண்டக்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் எழுதியிருந்திருக்கின்றனர். பாடசாலையில் கொடுக்கப்படும் வீட்டுவேலைகள் தவிர இப்போது தமிழ் மொழி மூலம் கல்வி போதிக்கும் யாழ்ப்பாணத்துக்குவெளியேயுள்ள பாடசாலைகளில் சரியான முறையில் கல்வி போதிக்கப்படுவதில்லை என்ற காரணத்தினால் சில தினங்களே விடுமுறை விடப்பட்டாலும் அந்த நாட்களைக்கூட

விள- குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி நாட்டுக்கேற்ற கல்வித்திட்டத்தை வகுப்பதுடன் மாணவ சமுதாயத்தை மன நிறைவுள்ள சமுதாயமாக உருவாக்கவேண்டியதும் அரசாங்கத்தினதுமட்டுமல்ல இந் நாட்டின் தலைவர்கள் கல்விமான்கள் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

## ரொடீஷிய விவகாரம்

ரொடீஷியாவின் புதிய அரசியல் அமைப்பு அங்கு பெரும்பான்மையினரின் ஆட்சி அமைய வேண்டுமென்ற சுதேசிகளின்கோரிக்கைக்கு சாவு மணி அடிக்கும் என்று ரொடீஷியாவில்ஒருதலைப் பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்து அங்கு சட்டவிரோதமாக அரசாங்கம் அமைந்துள்ள அயன்ஸ்மித் தெரிவித்திருப்பது உலக அபிப்பிராயத்தை அயன்ஸ்மித்துச் சமாக மதிக்கிருர் என்பது மட்டுமல்ல உலக மன்ற மான ஐ. நா வையும் சுதேசி யக்களின்சுதந்திர வேட்கையையும் அற்ப விஷயமாகக் கருது கிருர்.

அயன்ஸ்மித்தும் அவரது சகாக்களும் ரொடீஷியாவில் குடியேறிய வெள்ளையர்கள் அவர்களதுசந்ததியினர் ' பிரிட்டனில் வாழ்கிருர்கள்.

ரொடீஷியா ஓர் ஆபிரிக்க நாடு. அங்கு ஆபிரிக்கர்கள் மிகப் பெருந்தொகையினரராக வாழ்கின்றனர். அது அவர்களின் சொந்த நாடு அங்குஅவர்களைச் சுரண்டி வாழ்வதற்காகச் சென்ற வெள்ளையரின் சந்ததியினர்தான் அயன்ஸ்மித்தும் அவரது ஆட்களும் ரொடீஷிய சுதேசிகளின் விடுதலைக் கோரிக்கையை ஏற்று அந் நாட்டில் பெரும்பான்மையினரின் ஆட்சியை உருவாக்க, பிரிட்டன் முன்வந்தபோதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக ஒருதலைப் பட்சமாகச் சுதந்திரப் பிரகடனஞ்செய்து, ஆபிரிக்கத்தேசியத்தலைவர்வர்களைத் தூக்கிலிட்டு அங்கு சிறுபான்மையினர் ஆட்சியை அயன்ஸ்மித் ஏற்படுத்திஞர். அயன்ஸ்மித் ஆட்சிக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்தால் தேர்தலில் வாக்குகள் கிடைக்காது என்ற காரணத்தாலோ' தமது உறவினர்கள் என்பதாலோ வில்ஸன் அரசாங்கம் 'தடை நடவடிக்கை' என்று சாத்வீகம் பேசியது. தடை நடவடிக்கை பலிக்கவில்லை. பிரிட்டனின் பலஹீனம் ஸ்மித்தின் கையை ஓங்கச்செய்திருக்கிறது. அங்குய்லாவிலும், ஏடனிலும் படைபலம் பிரயோகிக்கத் தயாரான வில்ஸன் அரசாங்கம் ரொடீஷியாவில் தயங்குகிறது. ஆனுலும் இன்று வில்ஸன் அரசாங்கமே ஈடாட்டம் கண்டுள்ளது.

அயன்ஸ்மித்தின் திமிரை இச்சமயத்திலாவது பிரிட்டன் அடக்கத் தவறினல் அதன் விளைவு மோசமாக லாமென்பதை பிரிட்டன் உணரவேண்டும்.

## வேலணையில் தி.மு. . கிளை

வேலணை. வெள்ளி

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை ஒன்று வேலணையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வேலணை கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மறைந்த அறிஞர் அண்ணுவுக்கு இருநிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. பாலகிருஷ்ணன், துணைத்தலைவர் திரு. வி. எஸ். கனகரெத்தினம், செயலாளர் திரு. ஆ. சபாநாதன், துணைச் செயலாளர் திரு. செ. காசிலிங்கம் பொருளாளர் திரு. இ. சற்குருநாதன். 16 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்தின் மூன்ருவது ஆண்டுக்கூட்டம் நெடுந்தீவு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப் பட்டனர்:

தலைவர்: திரு. நா. இராமச்சந்திரன் உபதலைவர்: வே. சுந்தரலிங்கம், செயலாளர்: நா. இலட்சுமணராசா, உபசெயலாளர்: செ. மகேஸ். பொருளாளர்: க. மருதயினர், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் கா குலேந்திரன், ச. கணேஷ், அ. மரியநாயகம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

மாதகல், வெள்ளி

சென். தோமஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தராகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

போஷகர் வண.பிதா எல். யோசெவ் ஓ. எம். ஐ. தலைவர்: திரு. அ. லூயிஸ்; உபதலைவர்: திரு. ஆ. அன்ரனி பொர்ஞன்டோ, கௌரவ காரியதரிசி திரு. நீ. ஞேச் மரியதாஸ் உப கௌரவ காரியதரிசி: திரு, கி. ம. நீற்றர், தனுதிகாரி: திரு. அ. யோசெவ், விளையாட்டுத்தலைவர் திரு. ம. ரயிற்ரெஸ் யேசுதாஸ், உப விளையாட்டுத் தலைவர்: திரு. செ. லூட்ஸ் பிரான்சீஸ், நிலையப்பாதுகாவலர்: திரு இ. பிரான்சீஸ், உப நிலையப் பாதுகாவலர்: திரு. ப. அன்ரனி 'பொன் கலன்' அங்கத்துவ எண்பார்வையாளர்: திரு. செ. அ. சேம்பர்லெயின் நிர்வாகசபை உறுப்பினர்: திருவாளர்கள் ச. பா. யோசெவ், இ. பெனடிக்ற், கி. அருள்பிரகாசம் ஆ. இம்மனுவேல்.

......

## இன்று

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரி தனங்கிளப்பு மணல்காடு கந்தசுவாமியார் கோவிலில் இன்று பகல் மண்டலாபிஷேகம் நடைபெறும் சுவாமி வீதிவலம் காட்சியும் நிகழும்.

0 0

சரவணை, சனி

சரவணை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று காலை 8 மணிமுதல் திருநாவுக்கரசு நாயனுர் குரு பூசை நடைபெறும். மாலைநிகழ்ச்சியில் திருவாளர்கள் வே.சோமசுந்தரம் பண்டிதர், க.சிவசம்பு, கே. பி. ஹரன்சைவப் புலவர், வை. இராமகிருஷ்ண ஐயர், பண்டிதர் லோ.தியாகராசா ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவர்.

வேண்டும் இந்தப்பற்றும் விருப்பமும் வெறியாக மாறக்கூடாது. வெறியாக மாறினால் த... மற்றமொழிகள் மீது வெ...றுப்பு ஏற்படும்.''

சென்னை சுயப்பாக்கம் சித்தாந்தவித்தகர் திரு. சோமசுந்தரம் செட்டியார் இவ்வாறு தெரிவித்தார்,

ஈழநாடு காரியாலயத்தில் இலக்கண சுவாமிகள் குரு பூஜை நேற்று நண்பகல் நடைபெற்றது. பூஜையில் கலந்துகொண்ட திரு.சோமசுந்தரம் செட்டியார் மேலும் பேசியதாவது:

முன்னெருபோதும் வெளிவராமலிருந்த சிவஞான மாபாடியத்தையும் சிவாக்கிய பாடத்தையும் எடுத்துப் பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்ட பெருமையுடைய இலக்கண சுவாமிகள் குருபூஜையில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

குருபக்திதான் எமக்குத் தெய்வ அருளை வழக்குவது 'கு' என்ருல் அஞ்ஞானம் என்பதாகும், 'ரு' என்ருல் போக்குவதாகும். குரு என்ருல் அஞ்ஞானத்தைப் போக்குபவர்களாவர்.

குழந்தைக்கு அதனுடைய அம்மா அப்பாவைக் காட்டிக்கொடுத்தார். அப்பா குருவைக் காட்டிக்கொடுத்தார் குருமூலம் தான் தெய்வத்தைக்காண முடியும்.

அந்தக்குருவும் நல்லெண்ணமும் நற்சிந்தையும் உடையவராக இருக்க வேண்டும். குரு மூலம் அஞ்ஞானத்தைப் போக்க கோவில்களுக்குச் செல்ல வேண்டும். தீர்த்தம் ஆடவேண்டும், தலம் தீர்த்தம், மூர்த்தி தரிசனம் கடவுளை அடையவும் முத்

பயனைப் பெற நிருக்கு றன் காட்டும் வழியைப்பின்பற்ற வேண்டும் கடவுளை வணங்காவிட்டால் படித்ததினால் எந்தப்பயனுமே யில்லை.

பெரியபுராணத்தை முதலில் கோவில்களில் படிக்க வழி செய்தவர் நாவலர்தான் இலக்கணசுவாமிகளும் பிறந்தநாட்டை விட்டு பாரதத்திற்குப் பு...து தமிழும் சைவமும் த...ழைக்க தொண்டாற்றினார் என்றும் சோமசுந்தரம் செட்டியார் குறிப்பிட்டார், (கா நி.)

## தமிழர் மறுமலர்சி கழகம் உதயம்

உடுப்பிட்டி, வெள்ளி

ஈழத் தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் என்ற பெயரில் கரவெட்டியில் அரசியல் கலப்பற்ற இயக்கமொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

கரவெட்டி வாணிகலைக் கழக மண்டபத்தில் இயக்குநர் பண்டிதர் திரு. க. வீரகத்தி தலைமையில் இக் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சுபீட்சம் பெற்ற புதியசமூதாயத்தை உருவாக்குவதில் விஞ்ஞானத்தைத் தமிழில் கொண்டு வருவதற்கான சகல வழிவகைகளையும் ஆராந்து அமுல் செய்தல் இக்கழகத்தின் முக்கிய நோக்கமெனத் தெரிவிக்கப்பட்டது.

## ரூ 50,000 பொருட்கள் காரைநகரில் சிக்கின

யாழ்ப்பாணம், சனி

காரைநகரில் கடற்படையினுல், சுமார் 50,000 ரூபா பெறுமதியான சேலைகள் சாரங்கள் வேட்டிகள் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக 7 பேர் கைது செய்யப்பட்டு சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுங்க சப் கலக்டர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்ன விசாரணை செய்தபின்,, கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்ததோடு, ஏழுபேருக்கும் தலா 500 பா அபராதம் விதித்தார்.

## மே தின ஆர்ப்பாட்ட ஊர்வலம்: சந்தேக நபர்கள் ஆஜர்

யாழ்ப்பாணம், சனி

மே மாதம் முதலாம் தேதி யாழ்ப்பாணத்தில் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சம்பந்தப்பட்ட ஆறு பேர்கள் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் தற்காலிக மாஜிஸ்திரேட் திரு. எஸ். கனகரத்தினம் முன் னிலையில் ஆஜராளுர்கள். முதலாவது சந்தேக நபரான ஏ. கே. சுப்பிரமணியம் ஆஜராகவில்லை.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனி, முதலாவது சந்தேக நபர், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதால் இன்று ஆஜராகவில்லையென மாஜிஸ்திரேட்டின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

ஊர்வலத்தின் போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சிகப்பு நிற கொடிகள், சுலோக அட்டைகள், செருப்புகள் பொலிஸ் வானில் கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டன

மகமட் மரைக்காயர், எஸ். நடராசா, கௌரிகாந்தன், அப்துல் காதர், கே. டானியல், எஸ். செந்திவேல் ஆகியோர் நேற்றுக்காலை கோர்ட்டில் ஆஜராளுர்கள்.

தற்காலிக மாஜிஸ்திரேட் இவ்வழக்கை இம்மாதம் 24-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

சிங்களச் சட்டத்தால்

## வேலையிழந்த ஊழியர்கள் உதவி பெறவிரும்புகிருர்கள்

### பிரதமருக்கு ஜி. ஜி. கடிதம்

யாழ்ப்பாணம், சனி

'மற்றைய அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வு போன்ற பல சலுகைகளைப் பெறும்பொழுது சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த அரசாங்க ஊழியர்களும் அரசாங்கத்திடமிருந்து எந்த வகையிலாவது உதவியைப்பெற விரும்புகிருர்கள்.'

சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த அரசாங்க ஊழியர் சம்பந்தமாக யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

சிங்களம் மாத்திரம் சட்டத்தினுல் வேலையிழந்தவர்களின் தூதுக்குழு உங்களைப் பலதடவை சந்தித்ததை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இது சம்பந்தமாக உங்களுக்கு முன் பொருதடவையும் அறிவித்துள்ளேன்.

இது குறித்து நீங்கள் 1968ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எனக்கு எழுதியிருந்தீர்கள். இதற்குப்பின்னர் நீங்கள் எதுவும் அறிவிக்கவில்லை. இந்த அரசாங்க ஊழியர்கள் தங்கள் ஒய்வுக்காலத்து முன்னர் தங்கள் வேலைகளிலிருந்து கட்டாய ஒய்வு பெறுவதால் அவர்கள் சேவைக்காலத்தோடு 5 வருடம் கூட்டப்பட்டது எனத் தங்களைக் கண்ட பேட்டிகளில் நாங்கள் அறியக்கூடியதாக இருந்தது. ஆனுல் இதை உறுதிப்படுத்த இதுவரை ஒன்றும் செய்யப்படவில்லை.

மற்றைய அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வு போன்ற பல சலுகைகளைப் பெறும்பொழுது இவர்களும் அரசாங்கத்திடமிருந்து எந்த வகையிலாவது உதவியைப்பெற விரும்புகிருர்கள். அவர்கள் பல சலுகைகளைப் பெறும்பொழுது சிங்கள சட்டத்தின் மூலம் கட்டாயமாக ஓய்வெடுக்கும்படி உத்தரவிடப்பட்ட ,இந்த ஊழியர்கள் நிதி நெருக்கடியால் கஷ்டமுறுகிருர்கள்.

இந்த எனது ஒரு வேண்டுகோளிலாவது நீங்கள் இந்த ஊழியர்கள் விடயத்தில் அவர்களுக்கு நன்மைபயக்கும் படியாக நடவடிக்கைகள் எடுப்பீர்கள் என நம்புகிறேன்.

தடைபடலாம்.

## சுப்பிரிண்டனின் உத்தரவை மீறிஞராம் பஸ் கண்டக்டர்

யாழ்ப்பாணம், சனி

இ. போ. ச. சுப்பிரிண்டனின் உத்தரவை மீறிஞராம் பஸ் கண்டக்டர். இது சம்பந்தமாகபருத்தித்துறை இ. போ. ச. சுப்பிரிண்டன் வடபகுதி இ. போ. ச. முகாமையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

''உடுப்பிட்டி யூடாகவும், நெல்லியடி யூடாகவும் பருத்தித்துறை செல்லும் பெருந்தொகையான பஸ் பிரயாணிகள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் 3-5-69 இரவு காத்திருந்தனர். பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ பஸ் சேவை நிலைபடுமோசமடைந்திருந்ததால், யாழ். பஸ் நிலையத்தில் சேவையிலீடுபடாமல் நின்ற பஸ் ஒன்றை உடனடியாகப் பயன்படுத்த ஏற்றது செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். குறிப்பிட்ட பஸ்ஸில் கண்டக்டர் இருந்தார். பெருந்தொகையான பிரயாணிகளின் கஷ்டத்தைப்போக்க அந்த பஸ்ஸை அச்சுவேலிக்கு சேவைக்கு உடனடியாக விடவேண்டியுள்ளதால், அன்றைய கணக்கை முடிக்க வேண்டாமென பஸ் கண்டக்டரிடம் கூறினேன். அவர் பஸ்ஸை விடமுடியாதென கூறியதுடன் மிகவும் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டார். பருத்தித்துறை பஸ் டிப்போ சுப்பிரிண்டன் என்பதை அவரிடம் தெரியப்படுத்தினேன். சுப்பிரிண்டனுலும் சரி, கவர்னராக இருந்தாலும் சரி என்னுல் இனி வேலைசெய்ய முடியாது என்று சொன்னுர்.

இதனைத்தொடர்ந்து நான் பிரதான காரியாலயத்துக்குச் சென்று முறையிட்டேன். குறிப்பிட்ட பஸ் கண்டக்டரிடம் அச்சுவேலிக்கு பஸ்ஸை விடுமாறு அங்கிருந்த அதிகாரி உத்தரவிட்டார். முதலில் அவர் மறுத்து பொறுப்பதிகாரியுடனும் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டார். இரவு உணவுக்காக அரை மணித்தியாலம் தரும்படியும், வந்ததும் சேவையிலீடுபடுவதாகவும் கேட்டு இரவு உணவுக்குச் சென்றவர் அதிக நேரமாகியும் திரும்பிவரவில்லை. நீண்ட நேரமாகியும் கண்டக்டர் வராததால் யாழ். டிப்போவில் நின்ற வேருெரு பஸ் அச்சுவேலிக்கு விடப்பட்டது. பிரஸ்தாப பஸ் கண்டக்டர் தனது பஸ் வண்டியையும் சாரதியையும் யாழ். பஸ்நிலையத்தில் விட்டுவிட்டு டிப்போவில் தனது கணக்கை முடித்துவிட்டு கோண்டாவிலுக்குச் சென்று விட்டார் என்பதை பின்னர் அறிந்தேன்.

பிரஸ்தாப பஸ்கண்டர் டிப்போ சுப்பிரிண்டன் ஒருவரிடம் பணிவின்றி எவ்வளவு மரியாதைக்குறைவாக நடந்துள்ளார் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். இதுமட்டுமன்றி பொறுப்பதிகாரியையும் தான் அரை மணித்தியாலத்தில் வருவதாகக் கூறி ஏமாற்றியுள்ளார். அடுத்து பஸ் வண்டியையும் அதன் சாரதியையும் விட்டுவிட்டு டிப்போவுக்குச் சென்று தனது புத்தகத்தை ஒப்படைத்துள்ளார். இப்படியான பஸ் கண்டக்டர்களே பஸ்சேவை மோசமான நிலைக்குச் செல்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.''

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மேமாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org